விலை: 50.00 பக்கங்கள் : 20

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

சங்கு 25 ஒலி 324 வள்ளுவர் ஆண்டு 2055

ஐப்பசி 21 வியாழக்கிழமை (07.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## சமஷ்டி ஒருபோதும்

## உருவாக்கப்படமாட்டாது

### அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு) சமஷ்டி அரசியலமைப்பு ஒருபோதும் நாட்டில் உருவாக்கப்படமாட்டாது என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)




### அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

## ட்ரம்ப் வெற்றி



அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

10

## குளவிக்கொட்டு இளைஞன் மரணம்

### சிறுப்பிட்டியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்) குளவிக்கொட்டுக்கு இலக்கான இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சிறுப்பிட்டி 19















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீன நிதியுதவியில் புதிய வீடு

குறைந்த வருமானங் கொண்ட நபர்களுக்கு சீன அரசின் நிதியுதவி வேலைத்திட்டத்தின் கீழ் 1996 வீட்டு அலகுகளை நிர்மாணிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். (ம-7)

## பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலை உயரும்

புதிய அரசாங்கம் கோதுமை மா, பட்டர் போன்றவற்றின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்காவிட்டால், வரும் பண்டிகைக் காலத்தில் கேக் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிக்கலாம் என பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 190 முதல் 195 ரூபா வரை உயர்ந்துள்ளதாகவும் பட்டர், முட்டை போன்றவையும் அதிக விலையில் இருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிப்புக் காரணமாக ஒரு கிலோ பட்டர் கேக்கின் விலை 1000 முதல் 1200 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

வரும் பண்டிகைக் காலத்தில் முட்டை விலை மேலும் அதிகரிக்கும் பட்சத்தில் கேக் விலையும் அதிகரிக்கப்படும் என பேக்கரி உரிமையாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ம-7)


பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2024
(யாழ் - கிளிநொச்சி மாவட்டம்)
மத்தியில் கூட்டாட்சி!
மாநிலத்தில் சுயாட்சி!



4
உங்கள் முதன்மைத் தெரிவு
தோழர்
டக்ளஸ் தேவானந்தா
1
ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்)
(கட்சியின் யாழ். மாவட்ட மேலதிக நிர்வாக செயலாளர், கட்சியின் ஊடகப் பேச்சாளர், பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளர்)
X
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (C-127)



8 திசையும் சூரியன்
தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF)
வெளிப்படையான பேச்சு
அரசியல் நேர்மை
பதவிக்கு விலை போகாமை



வீ.ஆனந்தசங்கரி
X 8
யாழ் – கிளி தேர்தல் மாவட்டம்
(C-126)


## நீதித்துறை அமைச்சின் அதிகாரிகளுடன் பிரதமர் ஹரிணி கலந்துரையாடல்



(கொழும்பு)

நீதித்துறை அமைச்சு மற்றும் குறித்த அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் முன்னேற்றம் தொடர்பில் குறித்த நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்துகொண்டுள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று நீதித்துறை அமைச்சில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது இரசாயனப் பகுப்பாய்வு திணைக்களத்தின் பகுப்பாய்வு அறிக்கையை வழங்கும் திறனை அதிகரித்தல் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலின் போது விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தது. (ம-7)

## பொதுச் சொத்தை விரும்பியபடி பயன்படுத்த முடியாது - அநுர

(கொழும்பு)

இந்த நாட்டில் ஜனாதிபதியோ அல்லது எந்தவொரு அமைச்சரோ பொதுச் சொத்தை தத்தமது விருப்பத்தின் படி பயன்படுத்த முடியாது என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

நம் நாட்டுக்கு அரசியலில் ஒரு தரம் வேண்டும். அரசியல் வாதி நினைத்ததைச் செய்யலாமா? இல்லை. அதற்கு ஒரு அளவுகோல் இருக்கிறது. அரசியல் வாதி ஒரு குறிப்பிட்ட கட்டமைப்பில் செயற்பட வேண்டும். அரசியல் வாதி சட்டத்துக்குக் கீழ் படிய வேண்டும். அரசியல்வாதி நாகரிகமான சட்டத்தில் இருக்க வேண்டும் என்றார். (ம-7)

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 - 10 - 1949



மறைவு 06 - 11 - 2024

## நாகமுத்து திருச்செல்வம்

மாறாம்புலம் அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து திருச்செல்வம் அவர்கள் 06.11.2024 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும் நாகமணி - செல்வநாச்சியார் தம்பதியரின் அன்பு மருமகனும் சிவயோகமலர் (ரஞ்சினி) அவர்களின் பாசமிகு கணவரும் நிறோஜன் (சுவிஸ்), செந்தில்குமரன் (குமரன் - வெளிவாரி மாணவன் யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, மீனாட்சி மற்றும் கமலாவதி, அருட்செல்வம் ஆகியோரின் உடன்பிறந்த சகோதரனும் முருகானந்தனின் மைத்துனரும் மதுசனாவின் (சுவிஸ்) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 08.11.2024 வெள்ளிக்கிழமை மதியம் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"செல்வயோகம்"
மாறாம்புலம், அல்வாய்
வடக்கு, அல்வாய்.

தகவல் : குடும்பத்தினர்
செந்தில்குமரன் (குமரன்) - 077 4323 109
நிறோஜன் - 0417 7253 5341

(C-1536)

## சேவைநலன் பாராட்டு




திருமதி பிலிப்லியோனாட் அக்னேஸ் ஆனந்தரூபினி (SLTS I)

**சேவை விபரம்**

| | |
|---|---|
| யா/நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை | 26.03.1990 - 31.12.1994 |
| யா/ பெரியவிளான் றோ.க.த.க பாடசாலை, இளவாலை | 01.01.1995 - 09.01.1996 |
| மன்/ உயிலங்குளம் றோ.க.த பாடசாலை, மன்னார் | 10.01.1996 - 09.04.1997 |
| யா/ பெரியவிளான் றோ.க.த.க பாடசாலை, இளவாலை | 10.04.1997 - 20.07.1998 |
| யா/ நவாலி மகா வித்தியாலயம், நவாலி | 21.07.1998 - 16.01.2014 |
| யா/ மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை, மானிப்பாய் | 17.01.2014 - 19.12.2022 |
| யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, உடுவில் | 20.12.2022 - 06.11.2024 |

எமது பாடசாலையில் 20.12.2022 தொடக்கம் 06.11.2024 வரை அர்ப்பணிப்புடன் சேவையாற்றி தனது ஐம்பத்தேழாவது அகவையில் சேவையில் இருந்து ஓய்வு பெறும் திருமதி பிலிப்லியோனாட் அக்னேஸ் ஆனந்தரூபினி (SLTS - I) ஆசிரியர் அவர்களை ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை

(C-1537)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் விதிமுறைகளை மீறிய 8 வேட்பாளர்கள் கைது

## 9 இலட்சம் சுவரொட்டிகள் அழிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் சட்ட விதி முறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையில் 8 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக் களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் சட்டத்தை மீறி ஒட்டப் பட்ட 9 இலட்சம் தேர்தல் சுவ ரொட்டிகள் அழிக்கப்பட்டுள்ள தாகவும்

4 இலட்சம் தேர்தல் சுவ ரொட்டிகள் பொலிஸாரினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-8)












Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புதிய பாராளுமன்றம் அமைக்கப்பட்டதும்

# பயங்கரவாத சட்டத்தை நீக்க நடவடிக்கை

### அமைச்சர் விஜித ஹேரத் மீண்டும் தெரிவிப்பு



அமைச்சரவைத் தீர்மான ங்களை வெளியிடும் அமைச் சரவை சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித் தார்.

(கொழும்பு)

**பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படுவது தொடர்பாக புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னரே நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக் கையில்.

தற்போது பாராளுமன்றம் ஒன்று இல்லை. எனவே பயங்கரவாத தடைச் சட்ட த்தை நீக்குவது அல்லது திருத்துவது குறித்த நடவடிக் கைகளை எடுக்க முடியாது.

இந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப் பாட்டிலேயே அரசாங்கம் இருக்கிறது.

எனினும் இந்த விடயத் தில் புதிய பாராளுமன்றம் கூட்டப்படும் போது உரிய தீர்மானம் எடுக்கப்படும் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். (ம-7)

## 1794 முறைப்பாடுகள்

# தேர்தல் தொடர்பில் பதிவு

எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர் தல் தொடர்பில் இதுவரை (செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 05 ஆம் திகதி வரை) 1,794 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

அதன்படி, தேர்தல் சட்டங் களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்தி ற்கு 428 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பா ட்டு முகாமைத்துவ நிலையத் திற்கு 1,313 முறைப்பாடுக ளும் கிடைக்கப்பெற்றுள்ளன. (ம-7)

# ஊழல் மோசடிகளை ஒழிக்க அரசின் திட்டத்திற்கு ஒத்துழைப்பு

### ஜனாதிபதியின் செயலாளரிடம் பிரித்தானிய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

ஊழல் மோசடிகளை ஒழிக் கும் அரசின் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என ஜனாதிபதியின் செயலாள ரிடம் பிரித்தானிய உயர்ஸ் தானிகர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமா நாயக்க மற்றும் இலங்கைக் கான பிரித்தானிய உயர்ஸ் தானிகர் அன்ட்ரு பெட்றிக் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

இதன்போது இரு நாடுக ளுக்குமிடையிலான இரு தரப்பு உறவுகள் மேலும் வலு வாகத் தொடர்ந்தும் முன்னெ டுத்துச் செல்ல எதிர்பார்ப்ப தாகப் பிரித்தானிய உயர்ஸ்தா னிகர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத் துடனான வேலைத் திட்டத் தைப் பிரித்தானிய அரசாங்கம் பாராட்டுவதாகவும், ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்கு அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன், அரசாங்கத்தின் வருமான த்தை அதிகரித்துக் கொள் வதற்கான உதவிகளை வழங் கத் தயாரெனவும் அன்ட்ரு பெட்றிக் உறுதியளித்தார். (ம-7)

# உங்களுடன் இணைந்து பணியாற்ற விரும்புகின்றேன்

### ட்ரம்பிற்கான வாழ்த்தில் ஜனாதிபதி அநுர

உங்களுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறேன் என அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி டொனால்ட் ஜே.ட்ரம்பிற்கு, ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க வாழ்த்துத் தெரிவித் துள்ளார்.

தனது எக்ஸ் தளத்தில் இது தொடர்பில் ஜனாதிபதி பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில்,

"அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட டொனால்ட் ஜே. ட்ரம்ப் @realDonaldTrump அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக் கிறேன். இலங்கை மற்றும் அமெரிக்க மக்களுக்கு நன்மை பயக்கும் எமக்கிடை யிலான உறவிலுள்ள பொது வான இலக்குகளை அடை வதற்கு உங்களுடன் இணைந்து பணியாற்ற நான் எதிர்பார்க்கிறேன்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# அரச சேவையில் 1,200 வெற்றிடங்கள்

(கொழும்பு)

பொது நிர்வாக சேவை உள் ளிட்ட பல அரச நிர்வாக சேவைகளில் 1200 இற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் நில வுவதாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு பரீட்சைகள் தற் போது நிறைவடைந்துள்ள துடன் பெறுபேறுகளின் அடிப் படையில் உத்தியோகத்தர் கள் இணைத்துக் கொள்ளப்ப டவுள்ளனர்.

பொறியியல் துறையிலும் 250 இற்கும் மேற்பட்ட வெற் றிடங்கள் காணப்படுகின்றன. (ம-7)

# ஜனாதிபதியின் செயற்பாடுகளால் மக்கள் நிர்க்கதியாகியுள்ளனர்

### முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பொறுப் பற்ற செயற்பாடுகளினால் நாட்டு மக்கள் நிர்க்கதியாகி யுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே சஜித் பிரேமதாஸ இத னைக் குறிப்பிட்டார்.

இது குறித்துத் சஜித் பிரேம தாஸ மேலும் தெரிவித்துள்ள தாவது, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் செயற்பாடுகளினால் நாட்டு மக்கள் இன்று நிர்க்கதியா கியுள்ளனர்.இந்த நேரத்தில் நாட்டை கட்டியெழுப்புவதற்கான ஒரு தீர்வு ஐக்கிய மக்கள் சக் தியிடமே காணப்படுகின்றது.

பாராளுமன்றத்தில் பெரும் பான்மை பலத்தை ஐக்கிய மக்கள் சக்திக்கு வழங்குவ தன் மூலம் மக்களின் பிரச்சி னைகளுக்கு தீர்வுகளை வழ ங்கும் பலமான அரசாங் கத்தை உருவாக்குவோம்.

அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 6 மாதங்களுக்கு ஒருமுறை அதிகரிப்பதாக ஜனாதிபதி தேர்தல் மேடை யில் தெரிவித்திருந்தார். அது இன்னும் தேர்தல் வாக்குறு தியாகவே உள்ளது. வரி, எரிபொருள் மற்றும் மின்சார கட்டணங்கள் குறைக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். அத் தியாவசிய உணவுப் பொருட் களின் விலை குறைக்கப்பட் டாலும் சாதாரண மக்கள் உண் ணும் அரிசி மற்றும் தேங் காயை மலிவு விலையில் வழ ங்க முடியாத நிலை ஏற்பட்டு ள்ளது என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)

## கொடிகாமம் மந்துவிலில்

# வாய்க்காலில் விழுந்த ஒருவர் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் மந்துவில் வட க்கில் வாய்க்காலில் விழுந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இச் சம்பவம் இடம்பெற்று ள்ளது.

கொடிகாமம்-மந்துவில் வட க்குப் பகுதியைச் சேர்ந்த 72 வயதான முதியவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த முதியவரது சட லம் சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையில் ஒப்படைக்கப் பட்டு மரண விசாரணை களின் பின்னர் உறவினர் களிடம் ஒப்படைக்கப்பட்டு ள்ளது. (ம-7,30)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற பொதுத் தேர்தல்-2024

## யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டம்

# மாற்றம் நிகழுமா?


உலகத்தில் மாற்றங்கள் தொடர்கின்றன. தென்னிலங்கை மக்களும் அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளனர். ஈழத் தமிழர் மட்டும் தேங்கிவிட்ட நாற்றமடிக்கும் குட்டையா? எப்படி மாற்றத்தை உருவாக்கலாம்?


உலகத்திலேயே அதி உன்னதமான தியாகம், அர்ப்பணிப்பு, வீரம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கொண்ட எமது ஆயுதப் போராட்டத்தை புலம்பெயர் தமிழரே தாங்கி நின்றனர். பாரியையும் மிஞ்சி வாரி வாரி வழங்கினர். புலம்பெயர் தமிழ் மக்களின் இனம்சார்ந்த செயற்பாடுகளான தமிழ்ப் பாடசாலைகள், இசை, நடன கல்லூரிகள், விளையாட்டுக் கழகங்கள், தமிழ்ச்சங்கங்கள், மிகக் குறிப்பாக ஒட்டுமொத்தத் தமிழ் ஊடகங்கள் எல்லாமே போராளிகளின் புலம்பெயர் முகவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. இப்போதும் இருக்கின்றன. அவர்களின் ஏகபோக ஊடக பலத்தால் மக்களுக்காகத் தம்மையே அர்ப்பணித்த அந்தத் தியாகிகளின் முகவர்களாக இவர்கள்தான் இன்னமும் இருப்பதாக பலரையும் நம்பவைக்கிறார்கள். போராளிகள் தம்மையே மக்களுக்காகத் தியாகம் செய்தனர். ஆனால் அவர்களின் வெளிநாட்டு முகவர்கள் சுகபோக வாழ்க்கையில் ஊறி தமது சுகபோக வாழ்வுக்காக, ஆதிக்கத்திற்காக, செல்வாக்கு, புகழுக்காக அந்த மக்களையே தமக்காகப் பலிகொடுக்கிறார்கள். தியாகிகளுக்கும் இந்த நயவஞ்சகப் போலிகளுக்கும் வித்தியாசம் தெரியாத அப்பாவி மக்களை தமது ஊடக பலத்தால் இன்னமும் ஏமாற்றிக்கொண்டு இருக்கிறார்கள்.

மாவீரனாகிவிட்ட தலைவனுக்கு இதய தெய்வத்திற்கு அஞ்சலி செய்ய விடாமல் உயிரோடு இருப்பதாகப் பொய்கூறித் தமது சுயநல வியாபாரத்திற்காகத் தடுத்துக்கொண்டு பல்லாயிரம்கோடி செலவில் வெளிநாடுகளில் மாவீரர் அஞ்சலி நிகழ்வு செய்கிறார்கள். இங்கே இலங்கையில் போராளிக் குடும்பங்கள் வாழ வழியின்றித் தற்கொலை செய்கிறார்கள். "ஈழத்தமிழரின் அரசியலுக்கு நாமே உரித்தாளர், சொந்தக்காரர், எமக்காக நீங்கள் வெறும் முகாமையாளராகச் செயற்படுங்கள்" என்று 2010ஆம் ஆண்டுத் தேர்தலின் போது இந்த முகவர்கள் பேரம் பேசியபோது சம்பந்தர் தலைமையிலான கூட்டமைப்பு அதற்கு மறுத்து "நாம் இருபகுதியும் சேர்ந்து மக்களுக்கான சேவைகளை ஆற்றுவோம்" என்று விநயமாக வேண்டியும் அதை ஏற்காது திமிரோடு அப்படியானால் உங்களை நாம் அழித்து விடுவோம் என்று இன்றுவரை அந்தப் பணியையே தொடர்கிறார்கள். தமது நிதிபலத்தால் முதலில் பொன்னம்பலம் தலைமையில் சிலரையும் தொடர்ந்து சுரேஷ், விக்கி, அனந்தி என்று பலரையும் ஒவ்வொருவராக உடைத்தெடுத்து பின்னர் டெலோ, புளொட்டையும் உடைத்து எஞ்சிநின்ற தமிழரசுக்கட்சியிலும் சிலரை உடைத்து எடுத்து விட்டார்கள். இவர்களின் இந்த இனவிரோதச் செயல்களுக்கு தென்னிலங்கை இனவாதிகளும் தாராளமாக உதவுகிறார்கள். பண பலத்தால் வாக்குகளைச் சுயேச்சைக் குழுக்களையும் உதிரிக் கட்சிகளையும் தாராளமாகக் களமிறக்கியுள்ளனர்.

தம்மை எதிர்த்துப் போரிட்டவர்களைக்கூட மக்களின் நன்மைக்காக ஒன்றுசேர்த்து 22 உறுப்பினரை ஒரேஅணியில் நாடாளுமன்றத்திற்கு அனுப்பிய போராளிகள் அங்கே? தமது சுயநலத்திற்காக ஒன்றாய் இருந்தோரை சிதறு தேங்காயாகச் சிதைத்து அவர்களை தமது பொம்மைகளாகப் பயன்படுத்தும் வெளிநாட்டு பணநாயக முதலாளிகள் இங்கே? பணத்திற்கு விலைபோனது அந்தச் சுயநல அரசியல் வாதிகளது தவறுதான். ஆனால் அந்த விலையைக் கொடுத்து அவர்களை வாங்கியோர் எவ்வளவு கொடியவர்கள்? தேசியம் தேசியம் என்றும் ஒற்றுமை ஒற்றுமை என்றும் வாய்கிளியக் கத்தும் இவர்கள் அந்த இரண்டையுமே தமது நலனுக்காக விற்றுவிட்டு பின்கதவால் தென்னிலங்கை அரசியல்வாதிகளோடு கைகோர்த்து இலங்கையில் தமது முதலீடுகளை தாராளமாக முன்னெடுக்கிறார்கள். அது தவறு என்று நாம் சொல்லவில்லை. தமது சுயநலனுக்காக அப்படிச் செய்யலாம் ஆனால் மக்கள் நலனுக்காக அப்படி எதுவும் செய்யக்கூடாது. மக்கள் சிங்கள அரசியல் வாதிகளோடு மட்டுமல்ல சிங்கள மக்களோடுகூட பேசவே கூடாது. அவர்களை மக்களாக மதிக்கவே கூடாது. அவர்களை வெறுக்கவே வேண்டும் என்று பச்சை இனவாதத்தால் சுயலாபப் பிழைப்பு நடத்துவதையே தவறு என்கிறோம்.

தமது நிதிபலத்தால் விலைக்கு வாங்க முடியாத சம்பந்தரையும் சுமந்திரனையும் ஒழித்துக் கட்டுவதையே குறியாகக் கொண்டு கடந்த 16 வருடங்களாக தமது ஊடக பலத்தால் ஒட்டுமொத்தத் தமிழரையும் ஏமாற்றி தமது மாயைக்குள் வைத்திருக்கிறார்கள். தென்னிலங்கையில் சுயநலத்திற்காக இனவாதத்தால் தம்மை இதுவரை ஏமாற்றி நாட்டையே குட்டிச் சுவராக்கிய சிங்கள அரசியல் அயோக்கியரை இனம்கண்டு சிங்கள மக்கள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டார்கள். ஆனால் எம்மை ஏமாற்றிக்கொண்டிருக்கும் இந்த பணநாயக இனவாத முதலாளிகளை இனம் கண்டு அவர்களுக்கு இதுவரை விலைபோன அனைவரையும் அகற்றி ஒரு நேர்மையான ஒளிவுமறைவற்ற, சுயநலமாகச் சிந்திக்காமல் மக்களுக்காகச் சிந்திக்கும் ஒரு அரசியற் கலாச்சாரத்தை உருவாக்கும் அந்த மாற்றம் தமிழர் மத்தியில் ஏற்படுமா? அந்த மாற்றம் நடக்குமா?.






தனது வெற்றிக்காக இனவாதம் பேசாத, வெற்றுக் கோஷங்களை எழுப்பி மக்களை உணர்ச்சி வசப்படுத்தி அவர்களின் பகுத்தறிவுச் சிந்தனையை மழுங்கடிக்காத, பழைய புண்ணைக் கிளறிக்கிளறி அதைக் காட்டியே பிச்சை எடுக்காத, யதார்த்தபூர்வமான நடைமுறைச் சாத்தியமானவற்றை கூறுகின்ற, தமிழரின் விடிவிற்கான அரசியல் வழித்தடத்தை முழுமையாக முன்வைக்கின்ற, மதி நுட்பமும் தீர்க்கதரிசனமுள்ள ஒரு தமிழ் அரசியல்வாதி சுமந்திரன் மட்டுமே. கட்சி பேதமின்றி அனைத்து தென்னிலங்கை அரசியல்வாதிகளும் மதிக்கின்ற, பயப்படுகின்ற, சர்வதேச இராஜதந்திரிகள் கௌரவமாக அழைத்து ஆலோசனைகளைக் கேட்கின்ற ஒரே தமிழ்த் தலைவர் அவர் மட்டுமே. சர்வதேசம் பிடுங்கித் தரும் என்று பொய்கூறி ஏமாற்றாமல் சர்வதேச உதவிகள் அழுத்தங்களோடு முற்போக்கான சிங்கள மக்களின் பங்களிப்போடு தென்னிலங்கை அரசியல்வாதிகளோடு பேரம் பேசி உரிமைகளையோ அபிவிருத்தியையோ பெறவேண்டியவற்றைப் பெற்றுத்தரும் வல்லமை கொண்ட ஒரே தமிழ் அரசியல்வாதி சுமந்திரன் மட்டுமே. கொள்கைவாதியென்று கூறிக்கொண்டு அதற்காக அனைத்தையும் கோட்டைவிடும் கோமாளியும் அல்ல. புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதில் சம பங்காற்றக்கூடிய ஆளுமை, சட்டவல்லமை கொண்டவர் சுமந்திரன்தான்.

அத்தனை போலித் தமிழ் அரசியல்வாதிகளும் சுற்றிநின்று போரிட்டாலும் மக்களுக்காகத் தனியொருவனாக நின்று களமாடும் தானைத்தளபதி. தமிழரின் பல்வேறுபட்ட அன்றாடப் பிரச்சினைகள் சிலவற்றுக்காவது தன் சட்டவாதத் திறமையாலும் இராஜதந்திரத்தாலும் தீர்வு பெற்றுக்கொடுத்தவர். தமிழரசுக் கட்சியையும் சுத்தப்படுத்தி புத்துயிர் ஊட்டி புதியவர்களை இளையவர்களை, பெண்களை, யதார்த்தமான செயல்வீரர்களை உள்வாங்கி தந்தை செல்வா வழியில் தமிழர் அரசியலிலும் அந்த மாற்றத்தை ஏற்படுத்த முயலும் தலைவன், மக்கள் தோழன்தான் சுமந்திரன். ஈழத்தமிழினமாகிய நாமும் மாற்றத்தை ஏற்படுத்துவோம். சுதந்திரக் காற்றைச் சுவாசிப்போம். வாழ்ந்திடுவோம். வீட்டோடு வீட்டிற்கு வாக்களிப்போம்.


**யாழ்.மாவட்ட இளையோர் அமைப்பு**


அடையாளம் மாறாத அரசியல் மாற்றம்

ஜனாதிபதி சட்டத்தரணி **சுமந்திரன்** முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்



ஆட்புலம்
ஆதாரம்
ஆளுகை




(056)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வாவின் வழியில் பயணிப்பேன்

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் சந்திரகாசன் இளங்கோவன்



(யாழ்ப்பாணம்)

தமிழ் பேசும் மக்களின் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வுக்காக தந்தை செல்வாவின் வழியில் பயணிப்பேன் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் சந்திரகாசன் இளங்கோவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறுகிய கால அரசியல் இலாபங்களுக்காக பல்வேறுபட்ட காரணிகளால் அரசியல் பிளவுக்குட்பட்டுள்ள தமிழ் மக்களை கூட்டுக்குரலாக அணிதிரட்டி உண்மை, நீதி மற்றும் நல்லிணக்க அடிப்படையில் எமது எதிர்கால சந்ததிக்கு பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவோம். போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சம வாய்ப்புகளை உறுதிப்படுத்துவோம். எனவே உங்கள் பெறுமதியான வாக்குகளை வீணாக்காது சிந்தித்து செயற்படுங்கள் என அவர் தெரிவித்தார். (நி-8)

# ஊழலற்ற தேசம் என்பது இன்று கேள்விக்குள்ளாகியுள்ளது

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக ஊழல் மோசடி நிறைந்த ஒருவரை நியமித்துள்ளமையானது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் ஊழலற்ற தேசம் என்ற நிலைப்பாட்டை கேள்விக் குறியாக்கியுள்ளது என ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற தேர்தல் வேட்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஊழலை ஒழிப்போம், ஊழல்வாதிகளுக்கு தமது அரசில் எந்தவொரு இடத்திலும் பதவி நிலை வழங்கப்படாது என்ற கருத்தை முன்வைத்தே ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொண்டார்.

இந்நிலையில் தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் தனியார் நிறுவனங்களில் பதவிநிலை வகித்து பல்வேறு வகைகளில் பல கோடி ஊழல் மோசடிகளை செய்தவர் என கூறப்படுகின்றது. இவை கடந்த காலங்களில் சமூக ஊடகங்களிலும் வெளியாகியிருந்தன.

அந்தவகையில் இவ்வாறான ஒரு மோசடி மிக்க நபரை பனை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக நியமித்தமையானது ஜனாதிபதி அநுரவின் கருத்தை அல்லது அவரது நிலைப்பாட்டை கேள்விக்குறியாக்கியுள்ளதுடன் அவருக்கு வாக்களித்த மக்களையும் விசனமடையச் செய்துள்ளது. குறிப்பாக பனைசார் உற்பத்தி தொழிலை முன்னெடுக்கும் மக்களை பெரும் சங்கடத்துக்கும் உள்ளாக்கியுள்ளது.

அத்துடன் அத்துறை சார்ந்தவர்களின் உழைப்பும் முதலீடுகளும் கேள்விக்குறியாக இருந்து வரும் நிலையில் இந்த நியமனத்தால் மேலும் பாதிப்பை எதிர்கொள்ளவுள்ளது.

அத்துடன் இவ்வாறான நியமனம் அந்த மக்களை மேலும் மனரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பாதிக்கும் வகையில் அமையும் என சுட்டிக்காட்டிய அவர் இது தொடர்பில் ஜனாதிபதி அவதானம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (நி-8)

# தேர்தல்களம்




# எனது அரசியல் பிரவேசம் மாற்றத்தின் அறிகுறி

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் கிருஷ்ணவேணி ஸ்ரீதரன்



(யாழ்ப்பாணம்)

நாங்கள் அரசியலில் தலையிடாவிட்டால் அரசியல் எங்கள் வாழ்க்கையில் தலையிடும் என்பதை நம்புபவள் நான். என இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் திருமதி.கிருஷ்ணவேணி ஸ்ரீதரன் (கிட்டு) தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நிகழப்போகும் மாற்றத்தில் தமிழர்களாகிய நாங்கள் ஒரு இனக்குழுமமாக பங்காளிகளாவதை உறுதிப்படுத்தவும் தமிழ்த் தேசத்தின் இருப்பை உறுதிப்படுத்தவுமே நான் உங்கள் ஆதரவுடன் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் பாராளுமன்ற உறுப்பினராக ஆவதற்கு முன்வந்துள்ளேன்.


தனி மனித உரிமைகளைப் பற்றிப் பேசும் ஆட்சியாளர்களுக்கு ஒரு தேசிய இனத்தின் உரிமை பற்றி பேச மறுக்கின்ற சூழலே நிலவி வருகின்றது. ஆட்சியாளர்கள் மாறினாலும் தமிழ் மக்கள் தொடர்பான அணுகுமுறையில் அவர்கள் எவரும் மாற்றங்களை கொண்டிருக்கவில்லை என்பதை எமக்கு காலம் கற்றுத் தந்திருக்கின்றது.

1990 களின் இறுதிப் பகுதியில் இராணுவ நெருக்குவாரங்களுக்குள் எமது வடக்கு-கிழக்கு மக்கள் சிக்குண்டிருந்தபோது "பயமின்றிய வாழ்வை மீண்டும் அடைவோம்" என்ற தொனிப் பொருளோடு உங்களைத் தேடி வந்தவர்களில் நானும் ஒருத்தி.

எமது மக்களின் கதைகள் அவர் தம் வலிகள் உலகெங்கும் கேட்கும் பெருங்குரலாக ஒலிக்க வேண்டும் என்பதே அந்தத் தொனிப்பொருளின் இலட்சியம். எமது கதைகள் பேசு பொருளாகும் போது தான் எமக்கான விடுதலையின் வாசல்கள் திறக்கும் என அவர் தெரிவித்தார். (நி-8)

# மலிந்த அரசியலை மறுதலிக்கின்றேன்

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் ஆனந்தசங்கரி



(யாழ்ப்பாணம்)


மலிந்துபோன அரசியலை நான் மறுதலிக்கின்றேன். மக்களுக்கு சேவை செய்வதை முழு நேர நோக்கமாகக் கொண்டதால் சட்டத் தொழிலை கைவிட்டேன் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்தார்.

பதவிக்காகவோ சலுகைகளுக்காகவோ நான் சோரம் போனதில்லை. வடக்கு மாகாண ஆளுநர் பதவியையே நிராகரித்தேன். 1977/83 இனக் கலவரத்தில் அகதிகளாக வந்த மலையக மக்களை கிளிநொச்சியில் பொறுப்பேற்று. காணிகளை ஒதுக்கி அவர்களின் கௌரவமான வாழ்விற்கு வழி சமைத்தேன் எனவும் அவர் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கில் டெங்கு அதிகரிக்கும் அபாயம்

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு



(கொழும்பு)

வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கும் நிலை காணப்படுவதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட அந்த பிரிவின் வைத்தியர் லஹிரு கொடிதுவக்கு இதனைத் தெரிவித்துள்ளார். தற்போது நாடு முழுவதிலும் உள்ள 8 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தற்போது நாடளாவிய ரீதியில் 42,730 பேர் டெங்கு தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் வடகிழக்குப் பருவ பெயர்ச்சி மழை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் டெங்கு நோய் தொடர்பில் அவதானம் செலுத்தப்படுகிறது.

அதற்கமைய குறித்த பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# எவருக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்காது- மைத்திரி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் 225 என்ற அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது எனவும், பொதுத் தேர்தலில் பலமான எதிர்க்கட்சியை உருவாக்க மக்கள் வாக்களிக்கத் தயாராக இருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலநறுவை புதிய நகரில் நேற்றுக் காலை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது.

அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது

"எங்கள் அரசியலமைப்புச் சட்டத்தில் பாராளுமன்றத்தில் 225 அறுதிப் பெரும் பான்மையை எவராலும் பெற முடியாது.

எனவே இந்த பாராளுமன்றத்தில் பலமான எதிர்க் கட்சியை உருவாக்க படித்த, அறிவார்ந்த குழுவை பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.

பாராளுமன்றத்தில் பலமான எதிர்க்கட்சி இருந்தால் தான் அரசின் பணிகளை முறையாக மேற்கொள்ள முடியும்.

எனவே, அரசு செய்யும் நல்ல பணிகளுக்கு எதிர்க்கட்சி என்ற வகையில் ஆதரவு அளித்து, நாட்டு மக்களுக்கு எதிராக அரசு செய்யும் ஒவ்வொரு தவறுக்கும் எதிராக நடவடிக்கை எடுத்து எதிர்க் கட்சிகளின் வேலையைச் செய்ய மக்களிடம் வாக்கு கேட்கிறோம் என குறிப்பிட்டார். (நி-8)

# இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தில் திருத்தம்

(கொழும்பு)

இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என அரசாங்கம் கருதுவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"புதிய பாராளுமன்றம் ஸ்தாபிக்கப்பட்டவுடன் மேற்படி சட்டமூலத்தில் திருத்தம் செய்வதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தில் திருத்தங்கள் தேவையா அல்லது புதிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமா என்பது குறித்தும் தீர்மானிக்கப்படும்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இணையவழி பாதுகாப்பு சட்டமூலம், ஜனவரி 2024 இல் இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

பெரும்பான்மையான எம்.பி.க்கள் சட்ட மூலத்தை ஆதரித்தனர். அதே நேரத்தில் எதிர்க்கட்சிகள் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் உச்ச நீதிமன்றத்தின் தீர்மானத்துடன் ஒத்துப்போகவில்லை என்று கூறின.

அதன்பிறகு இலங்கையின் உச்ச நீதிமன்றம் பல இணையவழி பாதுகாப்பு சட்டமூல விதிகள் அரசியலமைப்புடன் ஒத்துப்போகவில்லை என்று தீர்மானித்தது.

இந்நிலையில், கடந்த வருடம் நவம்பர் 7ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்ட தீர்மானங்களின்படி இணையவழி பாதுகாப்புச் சட்ட மூலத்தை மறுபரிசீலனை செய்ய அரசாங்கம் ஒப்புக்கொண்டது. [illegible]


பாராளுமன்றத் தேர்தல்-2024
யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

களத்தில் கமல்...

1. தலைமைத்துவம்
- கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தின்
  - தலைவர் - 2014/15
  - உபதலைவர் - 2012/13
- இலங்கை சட்ட மாணவர் சங்கம்
  - உபதலைவர் - 2015/16
- கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் மற்றும் இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட கல்வி தொடர்பான பாசறைகளில் தொடர்ந்து பங்காற்றியமை.
- சர்வதேச நிறுவனத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கில் காணப்படும் பாடசாலைகளின் அபிவிருத்தி செயல்திட்டங்களுக்கு ஆலோசகராக செயற்பட்டமை.
- பல்வேறு மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்காக, சர்வதேச நிறுவனத்தின் ஊடாக நடாத்தப்பட்ட, 6 மாத கால தலைமைத்துவப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றமை.

2. முயற்சியாண்மை
- YAARL FITNESS - 2016 (யாழ் உடற்பயிற்சி நிலையம்)
- YAARL HOSTELS - 2018 (யாழ் தங்குமிட விடுதி)
- SINGAI RESTAURANT - 2024 (சிங்கை உணவகம்)

3. கல்வி
- Attorney - at - law இலங்கைச் சட்டக் கல்லூரி
- LL.B (Hons) - APIIT, கொழும்பு
- B.A (Economics) - கொழும்புப் பல்கலைக்கழகம் (பொருளியல், அரசியல் விஞ்ஞானம், சர்வதேச உறவுகள்)
- க.பொ.த உயர் தரம் - கொழும்பு இந்துக்கல்லூரி (பொருளியல், அரசியல் விஞ்ஞானம், அளவையியலும் விஞ்ஞானமுறையும்)
- க.பொ.த சாதாரண தரம் வரை - யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி

4. விளையாட்டு
- உதை பந்தாட்டம்
  - கொழும்புப் பல்கலைக்கழக அணியின் உபதலைவர் - 2014/15
  - இலங்கைப் பல்கலைக்கழக (SLUSA) Colours விருது - 2012, 2013, 2014
- படகோட்டம் (Rowing)
  - கொழும்புப் பல்கலைக்கழக Colours விருது - 2013
- பாடசாலையிலும் பல்கலைக்கழகத்திலும் சகலதுறை விளையாட்டு வீரராகத் திகழ்ந்தமை.

5. கலைத்துறை - இயக்குனர்
- குறும்படம் - " அக (நி) ", " பட்டம் 2 பட்டம் "
- பாடல்கள் - " கனவா நனவா... ", " ஷண்முக நாமமே... ", " நூக்க மொழியின் முதல்வன்... "



சுயேச்சைக் குழு - 2

ஊஞ்சல் சின்னம்

4

E.S.P நாகரத்தினம் கமலரூபன்
சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்

மாற்றத்திற்கான நம்பிக்கை...



(067)



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1995-இந்து<br>நட்சத்திரம் -உத்தராடம்<br>கி.பா-38<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: Bcom,Bank staff<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: B/14906 | பிறப்பு:1992-இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>கி.பா: 39<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L ,தையல்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் , வெளிநாடு<br>தொ.இ: G/14910 |
| பிறப்பு:1980-இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:A/L,Salesman, மனைவி இறப்பு<br>எதிர்பார்ப்பு:தகுதியான பெண்<br>தொ.இ: B/14907 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L,Nursing course(gov)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/14914 |
| பிறப்பு:1987-இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: O//L,Factory work(Aus)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14908 | பிறப்பு-1993-இந்து<br>நட்சத்திரம்:சித்திரை<br>கி.பா:42<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: BBA,ER Head (pvt)<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்<br>தொ.இ: G/14916 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பனை அபிவிருத்தி சபை ஊழியர்கள் யாழில் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்தி சபையின் ஊழியர்கள் தொடர்பில் தரக்குறைவாக கருத்து தெரிவித்த பனை அபிவிருத்தி சபையின் புதிய தலைவருக்கு எதிராக யாழில் நேற்று கவனயீர்ப்பு போராட்டமொன்று இடம்பெற்றது.

கைதடியிலுள்ள பனை அபிவிருத்தி சபையின் தலைமையகம் முன்பாக பனை அபிவிருத்தி சபையின் ஊழியர்களால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் பனை அபிவிருத்தி சபை ஊழியர்கள் தண்டச் சோறுகளா?, வடக்கு மாகாணத்தின் வினைத்திறனான ஆளுநரே எமக்கு தீர்வு தாரும், தகுந்த காரணமின்றி ஊழியர்களின் நிர்வாக பழிவாங்கல்களை உடனடியாக நிறுத்து, NPP அரசே தகுதியற்ற புதிய தலைவர் நியமனத்தை உடனடியாக இரத்துச் செய் உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகளை ஏந்தியவாறு பல்வேறு கோசங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (6-8-33)

# தேர்தல் விதி மீறலில் ஈடுபட்ட இரு வாகனங்கள்

## பொலிஸாரால் தடுத்து வைப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் தேர்தல் விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட குற்றச் சாட்டில் இரு வேட்பாளரின் இரண்டு வாகனங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வேட்பாளரின் உருவப்படம் மற்றும் ஸ்டிக்கர் பொறித்த வாகனங்களில் வேட்பாளர்கள் பயணிக்க முடியும். வேட்பாளரின்றி அவருடைய உருவப்படம் அல்லது ஸ்டிக்கர் பொறித்த வாகனங்கள் பயணிப்பதற்கு தேர்தல் திணைக்களம் தடை விதித்துள்ளது.

குறித்த விதிமுறையை மீறி வவுனியாவில் வேட்பாளரின்றி வேட்பாளரின் ஸ்டிக்கர்களுடன் நடமாடிய இரு வாகனங்களே வவுனியாப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (6-8-250)




இன்பக்கரம் அறக்கட்டளை அமைப்பினூடாக முன்பள்ளியை அழகுபடுத்துதலும் - மரநடுகையும் என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தென்மராட்சி வரணி நாவற்காடு வாணி முன்பள்ளியில் மரநடுகை நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

# மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற செயலமர்வு



(யாழ்ப்பாணம்)

அரச காணி உட்பட ஏதேனும் காணிக்குள் குடியிருக்கும் நுகர்வோருக்கு மின்சார சேவையினை வழங்கும் பொருட்டு மின்சார சேவை வழங்குநருக்கு பொறிமுறை ஒன்றினை உருவாக்குவதற்கான ஆலோசனை கேட்கும் செயலமர்வு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எல்.இளங்கோவன் தலைமையில் நேற்று முன்தினம் யாழ் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் அரச காணி உட்பட ஏதேனும் காணிக்குள் குடியிருக்கும் நுகர்வோருக்கு மின்சார சேவையினை வழங்கும் பொருட்டு மின்சார சேவை வழங்குநருக்கு பொறி முறை ஒன்றினை உருவாக்குவதற்கான பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்களின் ஆலோசனைகளைக் கேட்டறியும் நோக்கினை அடிப்படையாகக் கொண்டு இச்செயலமர்வு நடைபெற்றது.

மாவட்ட ரீதியில் கருத்துத் தெரிவித்த மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன் யாழ்.மாவட்டத்தில் உள்ள மீள் குடியேற்ற பிரதேசத்தில் காணிகளை அடையாளம் கண்டு மின்சார இணைப்பை வழங்குவதில் சில பிரச்சினைகள் காணப்படுவதாக தெரிவித்தார்.

இச்செயலமர்வு இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவின் பணிப்பாளர் பிரதிப் பணிப்பாளர், வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர்கள், இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் உட்பட துறைசார் அதிகாரிகளும் பொது மக்களும் கலந்து கொண்டனர். (6-8-33)

# தேர்தல்களம்

## விலை போகாத தலைவர்களை மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்

### குருசுவாமி சுரேந்திரன்



(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசியத்தை வாயளவில் பேசிக்கொண்டு தமிழ் மக்களின் வாக்குகளை அடமானம் வைத்து அமைச்சுப் பதவியை பெறுவதற்கு சிலர் முயற்சி செய்து வரும் நிலையில் அந்த கும்பலை தமிழ் மக்கள் தோற்கடிக்க வேண்டும் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்பாளர் குருசுவாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாராளுமன்றத் தேர்தல் நெருங்கும் நிலையில் யாழ் தேர்தலில் போட்டியிடும் பல சுயேட்சைக் குழுக்கள் மற்றும் தனியாக தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் தெற்கு கட்சிகளுடன் இணக்கத்தின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிடுகின்றன.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை பொறுத்தவரையில் கூட்டணியாக தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்து ஒற்றுமையுடன் ஓர் அணியில் சங்குச் சின்னத்தில் போட்டியிடுகிறோம்.

சங்குச் சின்னம் தமிழ் மக்களுக்கான சின்னம். அதனை பெறுவதற்கு தமிழ் மக்கள் எமக்கு ஆணை வழங்கிய நிலையில் அதனை நாம் பெற்றோம்.

ஆகவே, தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்கு தெற்கிலும் சர்வதேசத்திலும் தமிழ் மக்களுக்காக விலை போகாத தலைவர்களை தமிழ் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (6-8)

## தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க வாக்களியுங்கள்

### சுரேஷ் பிரேமச்சந்திரன்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டுமாக இருந்தால் தமிழ் மக்களின் கைகளில் அதிகாரங்கள் முழுமையாகக் கிடைக்கப்பெற வேண்டும் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போதே இவ்வாறு தெரிவித்தார். இலங்கையின் பொருளாதாரம் முன்னோக்கிச் செல்ல வேண்டுமாக இருந்தால், தமிழ் மக்களுக்கான ஆட்சி அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். எமக்கான ஆட்சி அதிகாரங்கள் பகிரப்படுகின்ற பொழுது, புலம்பெயர் தமிழ் மக்களிடமிருந்தும் எமது அண்டை நாடான இந்தியா, குறிப்பாக தமிழகத்து தொழிலதிபர்களும்கூட இங்கு முதலீடுகளை மேற்கொள்ள முன்வருவார்கள். அதன் மூலம் ஏற்படுகின்ற வடக்கு கிழக்கின் வளர்ச்சி என்பது ஒட்டுமொத்த இலங்கைக்கும் பாரிய நன்மைகளை ஏற்படுத்தும்.

இப்பொழுது பதவியில் இருக்கின்ற ஜனாதிபதியும் வரவிருக்கின்ற புதிய அரசாங்கமும் இவற்றை ஆழமாக ஆலோசித்து தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள முன்வர வேண்டும்.

இந்த விடயங்கள் தொடர்பாக புதிய அரசாங்கத்துடன் பேசக்கூடிய வல்லமையுள்ள இவைபற்றி தெளிவான சிந்தனையுள்ள சரியான உறுப்பினர்களைத் தெரிவுசெய்து பாராளுமன்றம் அனுப்ப வேண்டும். அதற்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை சங்கு சின்னத்தில் வாக்களித்து அதிகளவிலான பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என தெரிவித்தார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதேச சபை
# 2025 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன், மரக்கறிச் சந்தைகள், இறைச்சிக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், கடைகள், வாகனத்தரிப்பிடமும் மலசலகூடமும் உள்ளடங்கலான சுற்றுலாமையம் (படகு சேவை தவிர்த்து) என்பவற்றை 01.01.2025 தொடக்கம் 31.12.2025 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 07.11.2024 முதல் 22.11.2024 மதியம் 12.00 மணி வரை (அலுவலக நாட்களில்)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 22.11.2024 (வெள்ளிக்கிழமை) பி.ப 1.00 மணி வரை (அலுவலக நாட்களில்)

கேள்வி திறக்கும் திகதி :- 22.11.2024 (வெள்ளிக்கிழமை) பி.ப 2.00 மணி

| தொ.இல | சந்தைகளின் பெயர் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | 2025 ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | வேலணை செட்டிபுலம் மீன் சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 42,460.00 |
| 2 | வேலணை அம்பிகை நகர் மீன் சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 17,600.00 |
| 3 | சரவணை மீன் சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 9,860.00 |
| 4 | அல்லைப்பிட்டி மீன் சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 133,760.00 |
| 5 | நயினாதீவு மீன் மரக்கறிச் சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 38,100.00 |
| 6 | மண்டைதீவு வாராந்த சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 11,550.00 |
| 7 | புங்குடுதீவு இறுப்பிட்டி மீன் சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 45,000.00 |
| 8 | சாட்டி வாகனத்தரிப்பிடமும் மலசலகூடமும் உள்ளடங்கலான சுற்றுலாமையம் (படகு சேவை தவிர்த்து) | 2,000.00 | | 5,000.00 | 341,000.00 |
| | **வேலணை துறையூர் மீன் சந்தையும் சந்தையில் அமைந்துள்ள கடைகளும்** | | | | |
| 9 | வேலணை துறையூர் மீன் சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 220,000.00 |
| 10 | கடை இல - 01 | 2,000.00 | 1,800.00 | 5,000.00 | 35,000.00 |
| 11 | கடை இல - 02 | 2,000.00 | 1,800.00 | 5,000.00 | 35,200.00 |
| 12 | கடை இல - 03 சிற்றுண்டிச்சாலை | 2,000.00 | 1,800.00 | 5,000.00 | 188,100.00 |
| 13 | கடை இல - 04 | 2,000.00 | 1,800.00 | 5,000.00 | 36,150.00 |
| 14 | கடை இல - 05 | 2,000.00 | 2,400.00 | 5,000.00 | 38,500.00 |
| 15 | கடை இல - 06 | 2,000.00 | 1,800.00 | 5,000.00 | 35,000.00 |
| 16 | கடை இல - 07 கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,800.00 | 5,000.00 | 37,600.00 |
| | **வேலணை பொதுச்சந்தையும் (6ம் வட்டாரம்) சந்தையில் அமைந்துள்ள கடைகளும்** | | | | |
| 17 | மீன் மரக்கறிச் சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 43,850.00 |
| 18 | கடை இல - 01 | 2,000.00 | 1,500.00 | 5,000.00 | 35,000.00 |
| 19 | கடை இல - 02 | 2,000.00 | 1,500.00 | 5,000.00 | 35,000.00 |
| 20 | கடை இல - 03 கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,500.00 | 5,000.00 | 171,710.00 |
| 21 | கடை இல - 04 சிற்றுண்டிச்சாலை | 2,000.00 | 2,500.00 | 5,000.00 | 19,860.00 |
| | **புங்குடுதீவு முற்றவெளிச் சந்தையும் சந்தையில் அமைந்துள்ள கடைகளும்** | | | | |
| 22 | புங்குடுதீவு முற்றவெளி மீன் மரக்கறிச்சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 127,600.00 |
| 23 | கடை இல - 05 சிற்றுண்டிச்சாலை | 2,000.00 | 850.00 | 5,000.00 | 51,700.00 |
| 24 | கடை இல - 08 | 2,000.00 | 1,500.00 | 5,000.00 | 41,000.00 |
| 25 | கடை இல - 09 ஆட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 5,000.00 | 41,000.00 |
| 26 | கடை இல - 10 கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 5,000.00 | 170,500.00 |
| | **நயினாதீவு கடைத்தொகுதி** | | | | |
| 27 | கடை இல - 02 | 2,000.00 | 1,200.00 | 12,000.00 | 144,000.00 |
| 28 | கடை இல - 03 | 2,000.00 | 1,200.00 | 12,000.00 | 144,000.00 |
| 29 | கடை இல - 04 | 2,000.00 | 1,200.00 | 12,000.00 | 144,000.00 |
| 30 | கடை இல - 05 | 2,000.00 | 1,200.00 | 12,000.00 | 144,000.00 |
| 31 | கடை இல - 06&07 | 2,000.00 | 2,600.00 | 26,000.00 | 312,000.00 |
| 32 | கடை இல - 08 | 2,000.00 | 1,000.00 | 10,000.00 | 120,000.00 |

**பொதுவான நிபந்தனைகள்:- மீன்,மரக்கறிச் சந்தைகள், இறைச்சிக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், கடைகள், வாகனத் தரிப்பிடமும் மலசலகூடமும் உள்ளடங்கலான சுற்றுலாமையம் (படகு சேவை தவிர்த்து)**

1) கேள்வி பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும்.
2) உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3) கேள்வி ஆவணத்தை பெற்றுக்கொள்ளும் போது மேலுள்ள அட்டவணைக்கு அமைவாக கேள்வி வைப்புப் பணம், படிவக் கட்டணம் என்பவற்றை செலுத்துதல் வேண்டும்.
4) கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை **"செயலாளர், வேலணை பிரதேச சபை, வங்களாவடிச்சந்தி, வேலணை"** எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு 22.11.2024 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
5) தெரிவு செய்யப்படும் சந்தைகள், கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், வாகனத்தரிப்பிடமும் மலசலகூடமும் உள்ளடங்கலான சுற்றுலாமையம் (படகு சேவை தவிர்த்து) போன்றவற்றின் சித்திகர கேள்விதாரர்கள் சித்திகர தொகையின் 1/3 பங்கினையும் தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடையின் சித்திகர கேள்விதாரர் சித்திகர தொகையின் 2/3 பகுதியினையும் சபையின் தலைமை அலுவலகத்தில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.
6) கடைகளுக்கு சபையினால் விதிக்கப்படும் இயைபுடைய மாத வாடகையினை கேள்வித் தொகையுடன் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
7) சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டுவரும் பொருட்களின் விற்பனை விலையில் 4 வீதத்திற்கு மேல் வரியாக அறவிடக்கூடாது.
8) வாகனத்தரிப்பிடம், மற்றும் பொது மலசலகூடத்தினைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக அறவீடுகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாது.
9) சந்தையை குத்தகைக்கு எடுப்பவரினால் சந்தையில் மேற்கொள்ளப்படும் அறவீடுகளுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படுதல் வேண்டும்.
10) பொதுச்சந்தைகளில் இருந்து 500 மீற்றர் சுற்றளவுள்ள எல்லைக்குள் மரக்கறி, பழங்கள், தேங்காய், கோழி இறைச்சி போன்ற பொருட்கள் விற்பனை செய்ய முடியாது.
11) கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
12) கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
13) உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.
14) கேள்விகளை தகுந்த காரணங்களுடன் ஏற்றுக்கொள்வதற்கும் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ நிராகரிப்பதற்குமான முழு அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.

**நிபந்தனைகள் - நயினாதீவு கடைத்தொகுதி**

1. கேள்விப் பத்திரங்கள் கேள்வி கோரும் ஒவ்வொரு வியாபார நிலையங்களுக்கும் தனித்தனியாக அட்டவணையில் காட்டப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.
2. ஆகக் குறைந்த அடிப்படை கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
3. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்விதாரரை காரணம் காட்டாது ஏற்கவோ/ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
4. இவ் வியாபார நிலையங்களுக்கான மாதாந்த வாடகை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் தொகைக்கேற்ப சித்திபெறும் கேள்விதாரரிடமிருந்து பிரதேச சபையால் அறவிடப்படும் அத்துடன் காலத்திற்கு காலம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் வாடகை செலுத்தப்பட வேண்டும்.
5. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே கடை நடாத்தப்படவேண்டும் பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார் எனினும் வாடகைக்கு பெற்றவரின் இயலாமை, இறப்பு போன்ற காரணங்களினால் அவரது வாழ்க்கை துணை அல்லது அவரது வாரிசு (தேச வழமைச் சட்டத்திற்கு அமைவாக) உரிய அனுமதியினைப் பெற்று நடாத்த அனுமதிக்கப்படுவர்.
6. கடை கட்டடத்தில் புனரமைப்பு வேலைகள், மாற்றங்கள், சேர்ப்புகள் எதுவும் சபையின் எழுத்து மூல அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
7. சித்திபெறாத கேள்விதாரரின் கேள்வி வைப்புப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கமுடியும்.
8. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் ஒரே தடவையில் செலுத்த வேண்டிய திறப்புப் பணத்தினை (Key Money) முழுமையாகச் செலுத்த வேண்டும் என்பதுடன் 04 மாத வாடகையினையும் பாதுகாப்பு வைப்பாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்
9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் பிரதேச சபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினை பெற்று வியாபாரம்/ தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்
10. சித்திபெற்ற கேள்விதாரரால் பிரதேச சபைக்கு செலுத்தப்பட்ட திறப்புப் பணத்தொகை (Key Money) எச் சந்தர்ப்பத்திலும் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.
11. பெற்றுக் கொள்ளும் கடைகளில் ஏற்படும் இயற்கை அனர்த்தம் தவிர்ந்த பாதிப்புகளுக்கு வாடகைக்கு எடுத்தவரே பொறுப்புடையவராவார்.
12. கடைகளுக்கான மாதாந்த மின்சாரக் கட்டணத்தினை நிலுவைகளின்றி இலங்கை மின்சார சபைக்கு மாதாந்தம் தாங்களே செலுத்துதல் வேண்டும்.
13. திண்ம மற்றும் திரவ கழிவுகள் தொடர்பில் சபையின் நடைமுறைகளைப் பின்பற்றி உரிய முறையில் அவற்றினை அகற்றுதல் வேண்டும்
14. சித்தி பெறும் கேள்விதாரர் பிரதேச சபையால் அங்கீரிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதோ, மதுபான வகைகளோ, அருவருப்பான பொருட்களோ, போதைவஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்த பொருள்களையோ விற்பனை செய்வது அல்லது வைத்திருத்தல் தடை செய்யப்படுவதுடன் கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
15. வாடகைப்பணம் ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். தவறின் வாடகைத் தொகையின் 10 வீதத்தினை தண்டப் பணமாக சேர்த்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் வாடகைப்பணம் மூன்று மாதங்கள் தொடர்ந்து செலுத்த தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.

- **மேலதிக விபரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.**
- **குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிடப்படும் விடயங்களுக்கு உடன்பட வேண்டும் என்பதுடன் விதந்துரைக்கப்படாத விடயங்கள் தொடர்பில் சபையின் தீர்மானங்களுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.**

**திரு.தி.தியாகச்சந்திரன்,**
**செயலாளர்,**
**வேலணை பிரதேச சபை.**

**07.11.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 2036 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டி இந்தியாவில்?




(டில்லி)

உலக நாடுகள் பங்கேற்கும் ஒலிம்பிக் போட்டி 4 ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு வருகிறது. 2024 ஆம் ஆண்டுக் கான ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடத்தப் பட்டது.

அடுத்த (2028 ஆம் ஆண்டு) ஒலிம்பிக் போட்டி அமெரிக்காவின் லொஸ் ஏஞ் சல்ஸ் நகரிலும் 2032 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரிலும் நடைபெறவிருக்கிறது.

இந்நில்லயில், 2036 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்த முயற்சி மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

சமீபத்தில் பிரதமர் நரேந்திர மோடி நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றுகையில், 2036 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி இந்தியாவில் நடக்கும். இது 140 கோடி இந்தியர்களின் கனவு எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்த அனுமதி கோரி சர்வதேச ஒலிம்பிக் சபையிடம் இந்திய ஒலிம்பிக் சங்கம் முறைப்படி விண்ணப்பித்துள்ளது.

இந்தியாவில் ஒலிம்பிக் நடத்துவதற்கு தகுதியான நகரங்கள், அவற்றில் இருக்கும் வசதிகள் உட்பட பல்வேறு தகவல்களும் ஒலிம்பிக் போட்டி நடத்த அனுமதி அளித்தால் இந்திய அரசு என்னென்ன உதவிகள் செய்யும் என்ற விபரங்களும் அந்த விண்ணப்பத்தில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-8)

# அமெரிக்க ஜனாதி...

# அமோக வெற்றி பெ...

(வோஷிங்டன்)

**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில்... களையும் பின்னுக்குத் தள்ளி ட்ரம்... படைத்துள்ளார்.**

ஜனாதிபதியாக இருந்தவர், அடுத்த தேர்தலில் தோற்று, மூன்றாம் முறை மீண்டும் வென்று புதிய சாதனை படைத்துள்ளார்.

உலகின் பல நாடுகளில் தேர்தல் நடந்தாலும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எப்போதுமே ஸ்பெஷல்.

இம்முறை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் கடந்தகால தேர்தல்களின் போது நிகழ்ந்த பரபரப்புகளுக்கு பஞ்சமில்லாமல் தான் இருக்கிறது.

அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக ட்ரம்ப் விரைவில் பதவியேற்க உள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் கூறுகின்றன.

2016 ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவியில் அமர்ந்த ட்ரம்ப் 2020 ஆம் ஆண்டு ஜோ பைடனிடம்

## பாதுகாப்புத்துறை அமைச்சரை உடனடியாக நீக்கிய நெதன்யாகு

(காசா)

இஸ்ரேலின் பாதுகாப்புத் துறை அமைச்சரான யோவ் காலண்ட்டை அந்நாட்டின் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு உடனடியாக பதவி நீக்கம் செய்துள்ளமை உல களவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காசா முனையில் ஹமாஸ் அமைப்பினரை குறிவைத்து கடந்த ஓராண்டுக்கும் மேலாக இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

அதேபோல் ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக லெபனானில் ஆதிக்கம் செலுத்தும் ஹிஸ்புல்லா அமைப்பின ரோடும் இஸ்ரேல் போரிட்டு வருகிறது.

மேலும் ஈரான் மீதும் இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

இச் சூழலிலேயே இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சரை பிரதமர் பதவி நீக்கம் செய்துள்ளார். அவரது செயற்பாடுகள் மீது நம்பிக்கை இல்லாத காரணத்தினாலேயே யோவ் காலண்ட்டை பிரதமர் நெதன்யாகு பதவிநீக்கம் செய்துள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து இஸ்ரேலின் வெளியுறவுத்துறை அமைச்சராகப் பதவி வகித்து வந்த காட்ஸ் பாதுகாப்புத்துறை அமைச்சராகப் பதவியேற்க உள்ளார் எனவும், வெளியுறவுத் துறை அமைச்சராக கிதியோன் பதவியேற்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பதவிநீக்க நடவடிக்கை குறித்து பிரதமர் நெதன்யாகு வெளியிட்டுள்ள அறிக்கையில் 'போரின் ஆரம்பகட்டத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சரின் செயற்பாடுகள் நல்ல பலன்களை கொடுத்தன எனவும் இதனால் அவர் மீது நம்பிக்கை இருந்தது எனவும் ஆனால் கடந்த சில மாதங்களாக அவரது செயற்பாடுகள் நம்பிக்கை அளிக்கும் விதமாக இல்லை எனவும் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் "போரை வழி நடத்துவது குறித்து அமைச்சரவை எடுத்த முடிவுகளுடன் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஒத்துப்போகவில்லை எனவும், இதைச் சரிசெய்யத் தான் நிறைய முயற்சிகளை எடுத்ததாகவும் ஆனால் இருவருக்கும் இடையிலான பிளவு மேலும் அதிகரித்து விட்டதாகவும் நெதன்யாகு மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்நிலை



தொடர்வதற்கு அனுமதிக்க முடியாது என்பதனாலேயே பாதுகாப்புத்துறை அமைச்சரின் பதவிக்காலத்தை முடிவுக்கு கொண்டு வர முடிவு செய்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தனது பதவி நீக்கத்தை தொடர்ந்து யோவ் காலண்ட், 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் 'இஸ்ரேலின் பாதுகாப்பு என்பதே எப்போதும் தனது வாழ்வின் முக்கியமான லட்சியமாக இருந்து வருகின்றது எனவும், இனிமேலும் அப்படியே இருக்கும்' எனவும் பதிவிட்டுள்ளார். (ரி-8)

## கடவுள் என்னைக் காப்பாற்... ஜனாதிபதித் தேர்தலில் வெ...

(வோஷிங்டன்)




"கடவுள் இந்த ஒரு காரணத்திற்காகத் தான் கொலை முயற்சி சம்பவங்களில் இருந்து என்னைக் காப்பாற்றியுள்ளார்." என ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், பல்வேறு யூகங்களையும் கணிப்புகளையும் பின்னுக்குத் தள்ளி, டிரம்ப் வெற்றி பெற்று புதிய சாதனை படைத்தார். அவர் புளோரிடாவில் நடந்த நிகழ்ச்சியில் வெற்றி உரை ஆற்றினார்.அப்போது அவர் பேசியதாவது: குடியரசுக் கட்சி வெற்றிக்காக, வாக்களித்த ஒவ்வொரு அமெரிக்கருக்கும் எனது நன்றி. இந்த முறை என்னுடைய ஆட்சி அமெரிக்காவின் பொற்காலமாக அமையப் போகிறது. இது வரை யாரும் காணாத வகையில், ஒரு இயக்கத்தை நடத்தி வெற்றி வாகை சூடியுள்ளோம்.

அமெரிக்கா மக்களுக்காக கடுமையாக உழைப்பேன். பிரச்சிகளை தீர்ப்பேன். அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வு காணப்படும். மக்கள் என்னை நம்பித் தான் வாக்களித்துள்ளனர். அவர்கள் நம்பிக்கை வீண் போகாது. அமெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...திபதித் தேர்தல்

# ...வெற்றார் ட்ரம்ப்!



## ...லில் பல்வேறு யூகங்களையும் கணிப்பு
## ...ட்ரம்ப் வெற்றி பெற்று புதிய சாதனை

...வது
...வில்
...ட்டு
...பதி
...020
...டம்

தோல்வி அடைந்தார்.

2020 ஆம் ஆண்டு தோல்விக்கு பின் மீண்டும் களமிறங்கிய ட்ரம்ப் நடந்து முடிந்த தேர்தலில் அபார வெற்றி பெற்றுள்ளார்.

ட்ரம்பின் வெற்றியை தொடர்ந்து அவரது ஆதரவாளர்கள், குடியரசுக் கட்சி நிர்வாகிகள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது குடியரசு கட்சி சார்பில் போட்டியிடும் டொனால்ட் ட்ரம்ப் 267 தேர்தல் கல்லூரி வாக்குகளைப் பெற்று முன்னிலை வகித்து வருகிறார்.

ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடும் கமலா ஹாரிஸ் 224 தேர்தல் கல்லூரி வாக்குகளைப் பெற்றுள்ளார். (நி-8)

## ...ப்பாற்றியது இதற்குத்தான்
## ...ில் வென்ற ட்ரம்ப் நெகிழ்ச்சி



...திற் ...ற்சி ...னக் ...திப ...ற்ற ...தெரி ...தித் ...ளை ...குத் ...திய ...ளோ ...ற்றி ...வர் ...ட்சி ...ஓவ் ...னது ...டய ...கால ...இது ...பில், ...ற்றி ...கடு ...ச்சி ...வில் ...னை ...டும். ...ான் ...கள் ...மெ

ரிக்கா மக்கள் மகிழ்ச்சி மற்றும் பெருமைப்படும் வகையில் ஆட்சி நடத்துவேன். எண்ணில் அடங்காத தடைகளைக் கடந்து வெற்றி பெற்றுள்ளேன். அமெரிக்காவை மீண்டும் மகத்தான நாடாக மாற்றுவேன்.

வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றி. இக்கட்டான சூழலில் எனக்கு துணையாக இருந்த குடும்பத்தினர் அனைவருக்கும் நன்றி. நாட்டை சீரமைத்து மீண்டும் வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்வோம். ஜனாதிபதித் தேர்தல் மட்டுமல்ல செனட் மக்கள் சபையிலும் நமக்கே முன்னிலை கிடைத்துள்ளது. தேர்தல் வெற்றிக்கு முக்கியமான நபர் எலான் மஸ்க். எனக்கு ஆதரவளித்த எலான் மஸ்க்கு நன்றி என அவர் தெரிவித்தார். (நி-8)

## வரலாற்றில் மிகச்சிறந்த மீள்வருகை ட்ரம்பிற்கு நெதன்யாகு வாழ்த்து

(ஜெருசலேம்)

வரலாற்றின் மிகச் சிறந்த மீள்வருகைக்காக டொனால்ட் ட்ரம்பிற்கு இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வாழ்த்துக் களைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தான் வெற்றி பெற்றுள்ளதாக டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ள நிலையில் உலகத் தலைவர்கள் சிலர் அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

வரலாற்றின் மிகப் பெரும் மீள்வருகைக்காக வாழ்த்துக்கள் என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகைக்கான உங்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மீள்வருகை அமெரிக்காவிற்கு ஒரு புதிய ஆரம்பத்தையும் இஸ்ரேல், அமெரிக்கா இடையிலான மாபெரும் கூட்டணிக்கு ஒரு சக்திவாய்ந்த மறுஉறுதியையும் வழங்குகின்றது என இஸ்ரேலிய பிரதமர் தெரிவித்துள்ளார்.

இது மிகப்பெரிய வெற்றி என அவர் தெரிவித்துள்ளார். (நி-8)



## தற்கொலைக்கு தூண்டியதாக டிக்-டாக் செயலி மீது 7 வழக்குகள்




(பாரிஸ்)

சிறுமிகள் தற்கொலைக்கு டிக்-டாக் செயலி காரணமாக இருந்ததாகவும், 4 பேர் தற்கொலைக்கு முயன்றதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதுதொடர்பான வழக்கு விசாரணை பாரிஸ் கோர்ட் டில் நடைபெற்று வருகிறது.

பிரபல சமூகவலைத்தள செயலியான "டிக்-டாக்" தனியுரிமையை மீறுவதாக கூறி பல நாடுகள் அதற்கு தடை விதித்துள்ளன. இதற்கிடையே பிரான்சில் இரு சிறுமிகளின் தற்கொலைக்கு டிக்-டாக் செயலி காரணமாக இருந்ததாகவும் 4 பேர் தற் கொலைக்கு முயன்றதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன.


இதனையடுத்து குழந்தைகளிடையே மன அழுத்தம், தற்கொலை போன்றவற்றை "டிக்-டாக்" செயலி தூண்டுவதாகக் கூறி "டிக்-டாக்" செயலிக்கு எதிராக 7 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

இதுதொடர் பான வழக்கு விசாரணை பாரிஸ் கோர்ட்டில் நடைபெற்று வருகிறது. ஐரோப்பிய நாடுகளில் "டிக்-டாக்" செயலிக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்படுவது இதுவே முதல்முறை ஆகும். இதனால் "டிக்-டாக்" செயலி புதிய சிக்கல்களை எதிர் கொள்கிறது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் மாத இராசி பலன்கள்-2024

## எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்



**கிரகநிலை** - தைரிய வீரிய ஸ்தானத்தில் சனி (வ) - சுக ஸ்தானத்தில் ராகு - ரண ருண ரோக ஸ்தானத்தில் குரு(வ) - அஷ்டம ஆயுள் ஸ்தானத்தில் செவ்வாய் - தொழில் ஸ்தானத்தில் கேது - லாப ஸ்தானத்தில் சூரியன் - விரைய ஸ்தானத்தில் புதன், சுக்கிரன் என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றம்:** 05.11.2024 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் சனி வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 08.11.2024 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் இராசிக்கு மாறுகிறார். 13.11.2024 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் புதன் வக்கிரம் ஆரம்பிக்கிறார். 16.11.2024 அன்று லாப ஸ்தானத்தில் இருந்து சூரியன் அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** எந்த நேரத்திலும் தகுதி குறையாமல் செயற்படும் தனுசு இராசியினரே! நீங்கள் உயர்ந்த எண்ணங்களை உடையவர்கள். இந்த மாதம் பேச்சின் இனிமையால் காரியம் கைகூடும். சுப பலன்கள் ஏற்படும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆனாலும் எதிலும் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது.

தொழில் வியாபாரம் திருப்தியாக நடக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக அலைய வேண்டி இருக்கும். புதிய பொறுப்புகள் சிலருக்கு கிடைக்கலாம். வெளிநாடு முயற்சிப்பவர்களுக்கு அனுகூலம் கிடைக்கும்.

குடும்பத்தில் சகஜநிலை காணப்படும். உறவினர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரும். கணவன் மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். குடும்பத்தினருடன் ஆன்மிக பயணம் செல்லும் நிலை உருவாகும். மற்றவர்கள் ஆலோசனை கேட்டு உங்களை நாடி வருவார்கள். உங்கள் குடும்பத்தை விட்டு பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேருவார்கள்.

பெண்களுக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கூடுதல் கவனத்துடன் செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். அரசியல்வாதிகள் கட்சித் தலைமையின் ஆணையை மீறி தனியாக செயற்பட வேண்டாம்.

கலைத்துறையினருக்கு வெளிநாட்டு புது நிறுவனங்கள் உங்களுக்கு வாய்ப்ப




ளிக்கும். அயராத உழைப்பால் சில நுணுக்கங்களை கற்றுக்கொள்வீர்கள். மாணவர்களுக்கு மற்றவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கல்வியில் திருப்தி உண்டாகும்.

**மூலம்:** இந்த மாதம் மனதில் தன்னம்பிக்கை கூடும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர்கள். சந்திரன் சஞ்சாரம் உங்களது எண்ணப்படியே எதையும் செய்து முடிக்கும் சூழ்நிலை ஏற்படும். மற்றவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் நாட்டம் செல்லும். கௌரவம், அந்தஸ்து உயரும். வீண் செலவுகள் உண்டாகும்.

**பூராடம்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் தங்களது தொழில் விரிவாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். அதற்கு தேவையான பண உதவியும் கிடைக்க பெறுவீர்கள். ஆனால் போட்டிகள் பற்றிய கவலைகள் தோன்றும். சமாளிக்க முயல்வீர்கள்.

**உத்திராடம் 1ஆம் பாதம்:** இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களது திறமையால் அலுவலக பணியை சிறப்பாக செய்வார்கள். புதிய தொடர்புகள் மகிழ்ச்சியை தருவதாக இருக்கும். குடும்பத்தில் சுபகாரியம் நடைபெறும். மனைவி குழந்தைகளுடன் சந்தோஷமாக பொழுதை கழிப்பீர்கள். ஆன்மிக பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்.

**பரிகாரம்:** குருவிற்கு சாமந்தி மலரை சமர்ப்பித்து வியாழக்கிழமையில் வணங்கி வர எல்லா நன்மைகளும் உண்டாகும்;

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு - வியாழன் - வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 7, 8

**அதிஷ்ட தினங்கள்:** 1, 2, 28, 29

## எல்லாவகையிலும் நல்லதே நடக்கும்



**கிரகநிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சனி (வ) - தைரிய வீரிய ஸ்தானத்தில் ராகு - பஞ்சம ஸ்தானத்தில் குரு(வ) - சப்தம ஸ்தானத்தில் செவ்வாய் - பாக்கிய ஸ்தானத்தில் கேது - தொழில் ஸ்தானத்தில் சூரியன் - லாப ஸ்தானத்தில் புதன், சுக்கிரன் என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றம்:** 05.11.2024 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சனி வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 08.11.2024 அன்று லாப ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 13.11.2024 அன்று லாப ஸ்தானத்தில் புதன் வக்கிரம் ஆரம்பிக்கிறார். 16.11.2024 அன்று தொழில் ஸ்தானத்தில் இருந்து சூரியன் லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** எத்தனை தடை வந்தாலும் எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் பின்வாங்காத மகர இராசியினரே! இந்த மாதம் நன்மை வரும். எல்லாவகையிலும் நல்லதே நடக்கும். அனுகூலமான பலன் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். எதிர்ப்புகள் விலகும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். விரும்பிய காரியங்களை செய்து சாதகமான பலன் கிடைக்க பெறுவீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வியாபார போட்டிகள் குறையும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் விரிவாக்கத்திற்கு தேவையான பண உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்க பெறுவார்கள். பணி நிமித்தமாக வெளிநாடு செல்ல வேண்டிவரும்.

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் சொற்படி நடப்பது மனதுக்கு திருப்தி தரும். உறவினர்கள், நண்பர்கள் மூலம் நன்மை நடக்கும். பெண்களுக்கு பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். எடுத்த காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும்.

அரசியல்வாதிகள் எதிர்ப்புகளையும் மீறி முன்னேறுவர். சகாக்கள் மத்தியில் ஆதரவு பெருகும். வீண், வறட்டு கௌரவத்துக்காக சேமிப்புகளைக் கரைத்துக் கொள்ள வேண்டாம். கலைத்துறையினரின் படைப்புத் திறன் வளரும். பொது நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கு மளவுக்குப் பிரபலமாவார்கள். நல்ல




வாய்ப்புகள் வரும். உங்கள் முன்னேற்றத்திற்கு பாதை வகுக்கும் காலமாக இருக்கும்.

மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்த்த உயர்வு கிடைக்கும். உற்சாகமாக காணப்படுவீர்கள்.

**உத்திராடம் 2, 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். வாகன லாபம் ஏற்படும். தகப்பனாருடன் வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. வெளித்தொடர்புகளில் எச்சரிக்கை தேவை. எண்ணப்படி காரியங்களை செய்து முடிக்க சூழ்நிலை ஏற்படும். செலவுகளை குறைக்க திட்டமிடுவது நல்லது. கௌரவம் உயரும்.

**திருவோணம்:** இந்த மாதம் எடுத்துக் கொண்ட காரியங்களில் ஏற்படும் சந்தேகங்களை அவ்வப்போது போக்கிக் கொள்வது நல்லது. திட்டமிட்டு செய லாற்றுவது முன்னேற்றத்திற்கு உதவும். சிக்கலான பிரச்சினைகளையும் எளிதாக தீர்ப்பீர்கள். பணவரத்து இருக்கும். திறமையான செயல்களால் புகழும் அந்தஸ்தும் உயரும்.

**அவிட்டம்1,2ஆம் பாதங்கள்:** இந்த மாதம் பேச்சின் இனிமை, சாதுரியம் இவற்றால் எடுத்த காரியங்கள் எல்லாம் கைகூடும். பயணங்கள் ஏற்படலாம். ஆன்மிக பணிகளில் நாட்டம் செல்லும். உங்களது பொருட்களை கவனமாக பாதுகாத்துக் கொள்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும் ஆயுதம், நெருப்பு இவற்றை கையாளும் போதும் கவனம் தேவை.

**பரிகாரம்:** சனி பகவானுக்கு எள் தீபம் ஏற்றி வணங்கி வர கஷ்டங்கள் நீங்கும். ஆரோக்கியம் உண்டாகும்;

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன், வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 23, 24

**அதிஷ்ட தினங்கள்:** 16, 17

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கும் பொதுத் தேர்தல்

# நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு

**(கொழும்பு)**

**இலங்கையின் பொதுத் தேர்தலை முன்னிட்டு பொலிஸ் திணைக் களம் விசேட பாதுகாப்புத் திட்டத்தை முன்னெடுத்துள் ளது.**

இலங்கை சிவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த சுமார் 10,500 பேர் முப்படையைச் சேர்ந்த கூடுதல் அதி காரிகளின் ஆதரவு டன், பொலிஸார் பணிகளில் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர்.

52 வாக்கு எண் ணும் மையங்களில் தற்காலிக சோதனைச் சாவடிகள் உட்பட நாடு முழுவதும் 131 வீதி தடுப்புகளை இதுவரை பாதுகாப்பு அதிகாரி கள் அமைத்துள்ளனர்.

இலங்கையில் பொதுத் தேர்தல் 2024 நவம் பர் 14 ஆம் திகதியன்று நடைபெறவுள்ளது.

இதனையடுத்து 15 ஆம் திகதியன்று இலங்கை பாராளு மன்ற உறுப்பினர்க ளின் தெரிவு வெளி யாகிவிடும்.

இதற்கான அனை த்து ஏற்பாடுகளையும் இலங்கையின் தேர் தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டு வரு கிறது. (நி-8)

# சந்திரிக்காவின் பாதுகாப்பு நீக்கப்படவில்லை- விஜிதஹேரத்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பாதுகாப்பு நீக்கப்படவில்லை அல்லது குறைக்கப்படவில்லை என அமைச்சர வைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

தற்போது வரையில் 57 பாது காப்பு அதிகாரிகள் அவரின் பாதுகாப் புக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அவருக் கான பாதுகாப்பு 30 பேர் வரையில் குறைக்கப் படவில்லை என்றும் அவர் குறிப்பிட் டார். (நி-8)

# ஊடகங்களை ஒருபோதும் அரசாங்கம் ஒடுக்காது

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் ஊடகங்களை ஒருபோதும் ஒடுக்காது என அமைச் சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித் துள்ளார்.


அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம் பெற்றுவரும் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

அத்துடன் பிரதமர் ஹறிணி அமரசூரிய ஊடகங் களை ஒருபோதும் அச்சுறுத்த மாட்டார் எனவும் அவர் தெரிவித்தார். (நி-8)



## மரண அறிவித்தல்

பிறப்பு
14 - 03 - 1940



இறப்பு
04 - 11 - 2024

### அமரர் வேலுப்பிள்ளை கதிரவேலு

**(முன்னைநாள் இ.போ.ச நடத்துநர்)**

உடுப்பிட்டி இமையாணன் மேற்கு உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் தம்பாலை அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கதிரவேலு கடந்த 04.11.2024 திங்கட்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான முருகேசு-அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலநாயகதேவி அவர்களின் அன்புக் கணவனும், பிரபாகரன் (swiss) ரஜனி (இலங்கை), இதயராஜன் (இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிலானி, யோகரத்தினம்,சசிகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் அப்பாச்சாமி, மகேஸ்வரி, பூபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.11.2024 நாளை வெள்ளிக்கிழமை நணபகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தம்பாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சன்னதிவீதி,
தம்பாலை, அச்சுவேலி.

(C-1532)

தகவல்: குடும்பத்தினர்
077 730 7091

## இராசிபலன்

07.11.2024
ஐப்பசி 21, வியாழக்கிழமை
சஷ்டி முன்னிரவு 9.35 மணிவரை
பூராடம் முற்பகல் 9.51 மணிவரை

சுபநேரம் -7.35-9.05 மணிவரை
இராகுகாலம் -1.35-3.05 மணிவரை
சூரசங்காரம்,கந்தசஷ்டி முடிவு

சந்திராஷ்டமம்.
மிருகசீரிடம்.

வளவன்

**மேஷம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.

**கடகம்** உறவினர்களின் சந் திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடு விர்கள், பொது வாழ்வில் கௌர வமான சம்பவங்கள் இடம்பெற லாம்.

**துலாம்** உறவினர்கள் உங்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவர், செய் தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், வீட்டுத்தேவை களை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** உறவினர்களின் சந் திப்பால் உள்ளம் மகி ழும் சம்பவங்கள் இடம் பெறலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், மனச்சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.

**ரிஷபம்** உறவினர், நண்பர்க ளிடம் பேசும் போது நிதானம் தேவை, குடும்ப பொறுப்புக்கள் கூடும், தேவையற்ற விரயங்கள் மேலோங்கும் நாள்,ரோக பய முண்டு.

**சிம்மம்** அரைகுறையாக இருந்த பணிக்களை மீதியும் தொடர்வீர்கள், பிர பலமானவர்களின் சந் திப்பால் பெருமையடையும் நாள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள்.

**விருச்சிகம்** பக்கபலமாக இருப் பவர்களின் எண் ணிக்கை கூடும்,சுப நிக ழ்வுகளில் கலந்து கொள் ளும் வாய்ப்புண்டு, வருமானம் பெருக வழியமைத்துக் கொள் வீர்கள்.

**கும்பம்** அந்நிய தேசத் தொடர் புகள் எண்ணியபடியே கைகூடும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், நண்பர்களின் ஒத் துழைப்பால் நல்ல காரியம் நடை பெறலாம்.

**மிதுனம்** சடங்கு சம்பிரதாயங் களில் அதிக நம்பிக்கை ஏற்படும்,இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் திருப்தி யுண்டு.

**கன்னி** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும்,மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் கூடும்.

**தனுசு** உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு செய ற்படுவீர்கள், எதிர் பாராத காரிய மொன்று நடைபெறும் வாய்ப் புண்டு, காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**மீனம்** தொழில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், முத்தான வாய்ப்புக்கள் உங்க ளைத்தேடி வரலாம், வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.

ஒரு மாத இன்பத்தைவிட ஒரு நாள் துன்பம் கொடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு ஹெக்டேயரில் சோளம் பயிரிட திட்டம்

(கொழும்பு)

ஒரு ஹெக்டேயர் நிலப் பரப்பில் சோளத்தை பயிரிட திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் 80,000 ஹெக்டேயர் நிலப்பரப்பில் சோளம்பயிரிடப்பட்டதாக அமைச்சின் செயலாளர் என்.பி.என். எம்.விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் நுகர்விற்கு போதுமான அளவு சோளம் உற்பத்தி செய்யப்படாமையால் 3 இலட்சம் மெட்ரிக் தொன் சோளத்தை நாட்டிற்கு இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் இதுவரை நாட்டிற்கு 150,000 மெட்ரிக் தொன் சோளம் மாத்திரமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

எஞ்சிய தொகை சோளத்தை டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் இறக்குமதி செய்யுமாறு விவசாய அமைச்சினால் இறக்குமதியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-8)

# பன்றிக் காய்ச்சல் கட்டுப்பாடுகளில் தளர்வு

(கொழும்பு)

ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் நிலைமை காரணமாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் விதிக்கப்பட்டிருந்த விதிகளைத் தளர்த்தி புதிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய ஆரோக்கியமான விலங்குகளைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த வாரத்திற்குள் நோய் பரவல் ஓரளவு குறையும் எனவும் அதன் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

இந்த வர்த்தமானி நேற்று முன்தினம் முதல் மறு அறிவித்தல் வரை செல்லுபடியாகும்.

புதிய வர்த்தமானியானது கால்நடை மருத்துவரின் விலங்கு சுகாதார அறிக்கையின் அடிப்படையில் ஆரோக்கியமான பண்ணைகளிலிருந்து நோய்த்தொற்று இல்லாத விலங்குகளைக் கொண்டு செல்வதைச் சாத்தியமாக்குகிறது எனத் தெரிவித்தார் (நி-8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 380 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 300 |
| தக்காளி | 300 | 300 | 280 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 230 | 150 |
| கோவா | 200 | 200 | 250 | 200 |
| கரட் | 160 | 200 | 200 | 200 |
| பூசணி | 100 | 100 | 100 | 150 |
| புடோல் | 160 | 180 | 150 | 200 |
| வாழைக்காய் | 80 | 100 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 280 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 320 | 250 | 280 | 300 |
| பாகறகாய | 500 | 500 | 800 | 800 |
| வெண்டக்காய் | 100 | 120 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 160 | 260 | 200 |
| பயற்றங்காய் | 450 | 600 | 500 | 600 |
| லீக்ஸ் | 200 | 300 | 250 | 300 |
| பீற்றூட் | 120 | 150 | 150 | 200 |
| கறிமிளகாய் | 500 | 600 | 350 | 600 |
| முருங்கைக்காய | 350 | 120 | 100 | 200 |
| போஞ்சி | 350 | 350 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 280 | 350 | 350 |
| கீரை - 1 பிடி | 150 | 120 | 120 | 150 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 | 800 |
| தேங்காய (ஒன்று) | 150 | 180 | 150 | 120-180 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 450 | 400 | 400 |
| முள்ளங்கி | 150 | 120 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 80 |
| வல்லாரை | 60 | 35 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | 60 | 160 |

## இன்று ஒரு தகவல் 257



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# போதும் என்கின்ற மனம்

ஒரு ஊரிலே ஒரு பெரிய மனிதர் இருந்தார்.வசதியிலே தான் பெரிய மனிதர். குணத்திலே அப்படி இல்லை. இன்னும்பெரிய மனிதராக ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதனால்யாருக்கும் ஒரு பைசா கூட கொடுக்க மாட்டார். மகா கஞ்சப் பிரபு. அடுத்தவர்கள் நன்றாக இருந்தால் அதை இவரால் தாங்கிக் கொள்ள முடியாது. பொறாமைப்படுவார். அப்பேர்பட்ட பெரிய மனிதர்.

அவர் வீட்டிற்கு நேர் எதிரே ஒரு ஏழை இருந்தார். அவர் மிகவும் நல்லவர். அடுத்தவர்கள் கஷ்ரப்பட்டால் அதை அவராலே தாங்கிக் கொள்ள முடியாது. தான் கஷ்ரப்பட்டாலும் அடுத்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைக்கிறவர். ஒரு நாள் ஒரு சந்நியாசி அந்த ஊருக்கு வந்தார். அந்த பெரிய மனிதன் வீட்டிற்கு முன்னாலே போய் நின்று கதவைத் தட்டினார். கதவை தட்டிய சத்தம் உள்ளே இருந்த பெரிய மனிதன் காதிலே விழுந்தது. இருந்தாலும் அவர் கதவைத் திறக்கவில்லை. கதவை திறந்தால் யாராவது ஏதாவது கேட்பார்கள் கொடுக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு அமைதியாக இருந்து விட்டார். சந்நியாசி கொஞ்சநேரம் இருந்து பார்த்தார் யாரும் கதவைத் திறக்கவில்லை என்றவுடன் எதிர்வீட்டிற்கு போனார். அது தான் அந்த ஏழை வீடு. கதவைத் தட்டினார். உடனே அந்த ஏழையும் அவர் மனைவியும் கதவைத் திறந்தார்கள்.

சந்நியாசியைப் பார்த்து. உள்ளே வாருங்கள் என்று கூப்பிட்டார்.உட்கார வைத்தார்கள். இரவு சாப்பாடு முடிந்து விட்டது. அதனால் புதிதாக சாப்பாடு செய்து அவருக்கு கொடுத்தார்கள். சந்நியாசி திருப்தியாக சாப்பிட்டுவிட்டு புறப்படும் சமயத்தில் அவர்களை பார்த்து எனக்கு மிகவும் திருப்தியாக இருக்கிறது. உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். ஏதாவது மூன்று வரம் கேளுங்கள் தருகின்றேன் என்றார். அதற்கு அந்த ஏழையும் அவருடைய மனைவியும் உங்கள் அன்புக்கு மிகவும் நன்றி சுவாமி. இருந்தாலும் எங்களுக்கு வரம் எதுவும் தேவையில்லை ஏனென்றால் இப்போதே நாங்கள் இரண்டு பேரும் மிகவும் சந்தோசமாகத் தான் இருக்கின்றோம் என்றார்கள். இருப்பதைக் கொண்டு திருப்தி அடைகின்ற ரகம் அவர்கள். போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து. என்கின்ற பொன் மொழியை புரிந்து கொண்டவர்கள் போலிருக்கிறது. சரி என்று சொல்லிவிட்டு சந்நியாசி போகின்றார். இருந்தாலும் அவராலே சும்மா போக முடியவில்லை. இவர்களுக்கு ஆசீர்வாதம் செய்தே தீர வேண்டும் என்று முடிவு செய்தார். ஆசீர்வாதம் செய்தார். உடனேஅந்த ஏழையின் வீடு மாளிகையாக மாறியது. எல்லா வசதியும் வந்து விட்டது.

அடுத்த நாள் காலையிலே அந்த பெரிய மனிதன் வீட்டு வாசல் கதவைத் திறந்து பார்த்தான். ஒரே ஆச்சரியம்.எதிரிலே வழக்கமாகப் பார்க்கின்ற குடிசையைக் காண வில்லை. அது மாளிகையாக மாறியிருக்கிறது. இதுக்கு என்ன காரணம் என்று விசா ரித்தார்.

விபரத்தை அறிந்து கொண்டார். உடனே அந்த சந்நியாசியைத் தேடி புறப்பட்டார் காரை எடுத்துக் கொண்டு.ஒரு காட்டுக்குள்ளே அவர் உட்கார்ந்திருந்தார்.அவர் காலிலே போய் விழுந்தார்.என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் சாமி. ஏதோ தெரியாத்தனமாக அப்படி நடந்து கொண்டேன் என்றார். இப்ப உனக்கு என்ன வேணும் என்று கேட்டார் சந்நியாசி. வேறு ஒன்றும் வேண்டாம். அந்த ஏழைக்கு கொடுப்பதற்குச் சொன்ன அந்த மூன்று வரங்களை மட்டும் எனக்கு கொடுத்தால் போதும் என்றார்.சரி கொடுக்கிறேன். ஆனால் ஒரு விடயம். உனக்கு என்ன வேணும்என்றுநீமுதல்மூன்றுதடவை எதை நினைக்கின்றாயோ அது அப்போதே கிடைத்துவிடும் என்று சொல்லி அனுப்பிவிட்டார் சந்நியாசி. சரி என்று வரத்தை வாங்கிக் கொண்டு அந்த பெரிய மனிதன் காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டார் மிகவும் உற்சாகமாக. வழியிலே ஒரு இடத்திலே சகதியிலே மாட்டிக் கொண்டது கார். அவருக்கு எரிச்சலாகப் போய் விட்டது.

நமக்கு வரம் கிடைத்த விபரத்தை சீக்கிரமாகப் போய் ஊர் முழுவதும் சொல்லலாம் என்று நினைத்தால் இடையில் இந்தக் கார் இப்படி மக்கர் செய்யுதே. இந்தக் கார் இருந்தாலும் ஒன்று தான் எரிஞ்சு போனாலும் ஒன்று தான் என்று நினைத்தார். அவ்வளவு தான் அவர் வாங்கின வரம் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது. கார் அப்படியே தீப்பிடித்து எரிந்து சாம்பலாகிப் போய்விட்டது வாங்கிய முதல் வரம் தீர்ந்தது.

சரி பரவாயில்லை இன்னும் இரண்டு வரம் மீதி இருக்கிறது. பார்த்துக்கொள்ளலாம் என்று நினைத்து நடந்தே வீட்டுக்குப் புறப்பட்டார்.உச்சி வெயிலில் வேர்க்க விறுவிறுக்க நடந்து வந்து கொண்டிருக்கிறார். தாகம் வேறு தண்ணீர் கிடைக்கவில்லை. மனைவியை நினைத்தார். நான் இப்படி கொதிக்கிற வெயிலில் நடந்து கொண்டிருக்கின்றேன். அவள் மட்டும் ஆனந்தமாக ஏ.சி அறையிலே பங்களாவுக்குள்ளே உட்கார்ந்திருக்கிறாள். என் கஷ்டம் அவளுக்கு என்ன தெரியும்? அந்த பங்களா பற்றி எரிந்தால் தான் என் கஷ்டம் என்ன என்பது அவளுக்குப் புரியும் என்று நினைத்தார்.அவ்வளவு தான் இரண்டாவது வரம் வேலை செய்துவிட்டது. பங்களா பற்றி எரிந்து போய்விட்டது. மனைவிக்கோ தீக்காயம்! அதை நேரிலே பார்த்தார்.இப்பேர்பட்ட கஷ்டத்தை பார்க்கிறதுக்கா கடவுள் கண்ணைக் கொடுத்தார். இந்தக் கண் இருந்து என்ன பிரயோசனம் என்று நினைத்தார்.அவ்வளவு தான் மூன்றாவது வரமும் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது.பார்வை போய் விட்டது.

இந்தக் கதையிலே இருந்து ஒரு விடயம் கவனித்தீர்களா? வரம் வாங்கியும் அது அந்த பெரிய மனிதனுக்கு நல்லவிதமாக பயன்படவில்லை பார்த்தீர்களா? அதுக்கு என்ன காரணம்? பொறாமை, சுயநலம், முன்கோபம் ஆகியவை தான். இந்த மூன்று குணமும் இருந்தால் அடுத்தவர்கள் நல்லது செய்தாலும் அது நமக்கு நல்ல விதமாக பயன்படாது. அந்த மூன்று குணமும் உள்ள இன்னொரு பெரிய மனிதன் இருந்தார். அவர் இறக்கின்ற சமயத்திலே இறைவனை வேண்டினார். உடனே கடவுள் காட்சி கொடுத்தார். உன்னுடைய கடைசி ஆசை என்ன என்று கேட்டார். நான் இறந்த பிறகு போகின்ற இடத்திலே எப்போதும் எனக்கு பக்கத்திலே சாராயம், மாமிசம், பீடி, சுருட்டு எல்லாம் தடையில்லாமல் கிடைத்துக் கொண்டு இருக்க வேண்டும். அது தான் என் ஆசை என்றான். சரி அப்படியே கிடைக்கட்டும் என்று சொல்லிவிட்டு கடவுள் போய் விட்டார். அதே மாதிரி அவருக்கு எல்லாம் கிடைத்தது கொஞ்ச நாள் தொடர்ந்து அதை எல்லாம் சாப்பிட்டுக் கொண்டு இருந்தார். வேறு எதுவும் வேலை இல்லை. சலிப்பாக இருந்தது. எரிச்சல் வந்து விட்டது. அங்கே போய்க்கொண்டு இருந்தவரைக் கூப்பிட்டு என்ன சார் இடமிது.சலிப்பாக இருக்கிறது. இங்கே வந்ததை விட பேசாமல் நரகத்திற்குப் போய் விடலாம் என்றார். அதற்கு அவர் மெதுவாக இவர் அருகே வந்து இப்போது நீங்கள் இருக்கின்ற இடமே நரகம் தான். என்று சொல்லி விட்டு அலட்டிக்கொள்ளாமல் நடந்து போனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பியின் மகுடவாசகத்திற்குள் தமிழர்களுக்கு இடமுண்டா?

## அருட்தந்தை சக்திவேல் கேள்வி

(நெளுக்குளம்)

தேசிய மக்கள் சக்தியின் மகுடவாசகத்திற்குள் தமிழர்கள் உள்ளடக்கப்படுவார்களா? என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்கள் இன அழிப்புக்கு முகம் கொடுத்தும் அரசியல் கொள்கையில் மாறாது பயணித்துக்கொண்டிருக்கையில் தேசிய மக்கள் சக்தியின் பின்புலமாக செயற்படும் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் செயற்குழு உறுப்பினர்கள் 13 ஆம் திருத்தமும் அதிகாரப் பகிர்வும் தமிழர்களுக்கு தேவையில்லை எனக்கூறுவதும் மகாணசபை தேர்தல் நடத்துவோம் என்று கூறுவதும் அரசியல் கபட நாடகமே.

வளமான நாட்டையும் அழகான வாழ்வையும் மக்களுக்கு சொந்தமாக்க வேண்டுமாயின் நாட்டில் புரையோடிப் போய் உள்ள தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும்.

அரசியல் அறம் காப்போர்களை அடையாளம் காண்போம். அவரோடு பயணித்து எமது வாக்கின் மூலம் அவர்களைப் பலப்படுத்துவோம். எமது தேசம், எமது மண் சார்ந்த வாழ்வு அது வளமானது. அதுவே அழகானது எனத் தெரிவித்துள்ளார். (6-8-299)

# பயங்காரவாத சட்டத்தில் கைதான மூவர் விடுவிப்பு

## நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

(குருமன்காடு)

பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிரான தீங்கு விளைவிக்கும் ஆயுதங்களை உடைமையில் வைத்திருந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட மூவர் குற்றமற்றவர்கள் என தெரிவித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனால் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

வவுனியா பெரியபுளியாளங்குளம் பகுதியைச் சேர்ந்த, சிறிசுப்பிரமணியம் கிரிசா, கந்தப்பு கஜேந்திரன் மற்றும் பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த காகைசிங்கம் காந்தருபன் ஆகிய சந்தேக நபர்களே இவ்வாறு விடுவிக்கப்பட்டனர்.


கடந்த 2019 ஆம் ஆண்டு தை மாதம் வவுனியா, சாளம்பைக்குளம் பகுதியில் தீங்கு விளைவிக்கக் கூடிய ஆயுதங்களான கிளைமோர் குண்டுகளை உடைமையில் வைத்திருந்தனர் என்று கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த மூவரும் கைது செய்யப்பட்டு பொலிஸ் விசாரணையின் அடிப்படையில் பீ அறிக்கை தயார் செய்யப்பட்டு வவுனியா நீதவான் நீதிமன்றில் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு தொடர்பில் நீதிமன்றில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

எதிரிகளான மூவருக்கும் எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரசதரப்பு வழக்கு தொடுநரால் சந்தேகத்துக்கு அப்பால் இறை ஒப்புச்சாட்சியங்கள் எண்பிக்க தவறியமையால் சட்டவிதிகள் வழக்கத்தில் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மேல் நீதிமன்றில் இது தொடர்பான வழக்கு விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த நிலையில் நேற்று தீர்ப்புக்காக தவணையிடப்பட்டிருந்தது.

அரச தரப்பின் நியாயமான சந்தேகங்களிற்கு அப்பால் தவறு இழைக்கப்படவில்லை என்ற அடிப்படையில் பிரிவு 134 இன் சான்று கட்டளை சட்டத்தின் பிரகாரம் தீர்ப்பளிக்கப்பட்டு எதிரிகளான குறித்த மூவரும் வழக்கில் இருந்து விடுவிக்கப்படுவதாக நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பளித்தார். (6-8-299)



மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் "பெண்களின் பங்களிப்பை அரசியலில் மேம்படுத்துவோம்" என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு வீதி நாடகம் ஒன்று இடம்பெற்றது.


# யாழ்ப்பாணம் மாநகர சபை

**சிற்றுண்டிச்சாலைகள், வாகனப்பாதுகாப்பு நிலையங்கள் , ஆரிய குளம் பொழுதுபோக்கு மையம், பண்ணை கடற்கரைப் பூங்கா, நடமாடும் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2025**
**(01.01.2025 - 31.12.2025)**

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா **1,180.00** (வற் வரியுடன்)

கேள்விப் படிவம் விநியோகித்தல் - 07.11.2024 - 21.11.2024
**(மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)**

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 22.11.2024 மு.ப 10.00 மணி வரை

கேள்வி திறத்தல் - 22.11.2024 .மு.ப 10.00 மணிக்கு

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **22.11.2024** ஆம் திகதி மு.ப **10.00** மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
3. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதிஅற்றவர் ஆவார் . அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
4. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவை உத்தியோகத்தரது கடிதம் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
5. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
6. குத்தகை தொடர்பான ஏனைய நிபந்தனைகள் நானாவித இறைவரிப்பகுதியின் விளம்பரப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நிபந்தனையின் பிரதி தேவைப்படின் அலுவலகநேரத்தில் மாநகர சபை வளாகத்தில் உள்ள நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும்.

| இல | சிற்றுண்டிச்சாலைகள், வாகனப்பாதுகாப்பு நிலையங்கள் , ஆரிய குளம் பொழுதுபோக்கு மையம், நடமாடும் கடைகள் | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை(வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை | 10.000.00 | 1.000.000.00 |
| 2 | யாழ் பொதுநூலக சிற்றுண்டிச்சாலை | 5.000.00 | 360.000.00 |
| 3 | துரையப்பா விளையாட்டு அரங்கு சிற்றுண்டிச்சாலை | 1.000.00 | 94.500.00 |
| 4 | இந்து விடுதிக்கு தெற்குப்பக்கமாக உள்ள வாகனத்தரிப்பிட பாதுகாப்பு நிலையம் | 4.000.00 | 385.000.00 |
| 5 | நீதிமன்ற துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 4.500.00 | 414.000.00 |
| 6 | ஆரியகுளம் பொழுதுபோக்கு மையம் | 10.000.00 | 171.600.00 |
| 7 | நடமாடும் கடை - முத்திரைச்சந்தை இல 01 | 20.000.00 | 181.100.00 |
| 8 | நடமாடும் கடை - முத்திரைச்சந்தை இல 02 | 20.000.00 | 183.100.00 |
| 9 | நடமாடும் கடை – பண்ணை மீன் சந்தை இல 01 | 20.000.00 | 211.000.00 |
| 10 | நடமாடும் கடை – பண்ணை மீன் சந்தை இல 02 | 20.000.00 | 211.000.00 |
| 11 | நடமாடும் கடை – நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் இல 01 | 20.000.00 | 211.100.00 |
| 12 | நடமாடும் கடை – நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் இல 02 | 20.000.00 | 190.000.00 |
| 13 | பண்ணை கடற்கரைப்பூங்கா | 20.000.00 | 1.420.000.00 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் (தொலைபேசி இலக்கம் 021 221 5978) தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணி வரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை ,**
**யாழ்ப்பாணம்.**

(சி-1535)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 625





என் அருமைத் தந்தையின் உடல் நிலையைப்பற்றி எல்லோரும் கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறோம். அருள்மொழிவர்மரைப் பற்றி நாடெல்லாம் கவலையில் ஆழ்ந்திருக்கிறது"

"ஆனால் உன்னுடைய திரு முகத்தில் அதைப்பற்றிய கவலை எதையும் நான் காணவில்லையே, தாயே!"

வீரமறக் குலத்தில் பிறந்தவள் நான். எல்லோரையும் போல் அபாயம் என்றதும் அழுதுகொண்டிருக்கச் சொல்கிறீர்களா?

ஒரு நாளும் அவ்விதம் சொல்லமாட்டேன். என்னைப் போன்ற வீரமற்ற ஜனங்களுக்கு இளவரசி ஆறுதல் கூறும்படி தான் சொல்லுகிறேன்.

ஆச்சாரியரே! தங்களுக்கா நான் ஆறுதல் கூறவேண்டும்? உலகமே புரண்டாலும், நிலை கலங்காத வைர நெஞ்சம் படைத்தவராயிற்றே தாங்கள்!

அப்படிப்பட்ட என்னையும் கலக்கி விடுகிறாய், அம்மா! அந்தப்புரத்துப் பெண்கள் ஆடல் பாடல்களில் ஆனந்தமாகக் காலங்கழித்து வர வேண்டும் அதைவிட்டு இராஜாங்க விடயங்களில் நீ தலையிட்டதனால் எத்தகைய விபரீதம் நேர்ந்தது பார்த்தாயா!

"ஐயோ! இது என்ன பழி? நான் எந்த இராஜாங்க விடயத்தில் தலையிட்டேன்? என்னால் என்ன விபரீதம் நடந்தது?"

இன்னும் சில காலத்துக்குப் பொன்னியின் செல்வன் இலங்கையிலேயே இருக்க வேண்டும் என்று நான் சொல்லிவிட்டு வந்தேன். அதற்கு விரோதமாக நீ உடனே புறப்பட்டு வரும்படி உன் தம்பிக்கு ஓலை அனுப்பினாய். உன் விருப்பத்துக்கு மாறாக இந்தக் கிழவன் பேச்சை யார் மதிப்பார்கள்? அதனால் நேர்ந்துவிட்ட விபத்தைப் பார்த்தாயா? சோழநாட்டு மக்களின் கண்ணுக்குக் கண்ணான இளவரசரைக் கடல் கொண்டு விட்டது. சற்று முன் இந்த அரண்மனை வாசலில் ஜனத்திரள் கூடி ஆர்ப்பாட்டம் செய்ததைப் பார்த்தாய். இம்மாதிரி நாடெங்கும் இன்று குழப்பம் நடந்து வருகிறது. இந்த அல்லோல கல்லோலத்துக்குக் காரணம் நீயல்லவா தாயே!

"என்னுடைய ஓலையைப் பார்த்துவிட்ட அருள்மொழி வர்மன் இலங்கையிலிருந்து புறப்பட்டான் என்று ஏன் சொல்கிறீர்கள்? பழுவேட்டரையர் இரண்டு கப்பல் நிறைய வீரர்களை அனுப்பி இளவரசனைச் சிறைப் பிடித்துக்கொண்டு வரச்செய்தது உமக்குத் தெரியாதா?"

"தெரியும் அம்மா! தெரியும்! அத்துடனிருந்தால், இப்பொழுது பொன்னியின் செல்வனுக்கு நேர்ந்து விட்ட கதிக்குப் பழுவேட்டரையர்களைப் பொறுப்பாளிக்கலாம். அவர்கள் அனுப் பிய கப்பல்கள் இரண்டும் நாசமாகிவிட்டன. உன்னுடைய ஓலைக்காகத்தான் இளவரசன் புறப்பட்டான் என்று அவர்கள் சொன்னால் யார் அதை மறுக்க முடியும்?"

"ஐயா! நான் ஓலை அனுப்பியது தங்களுக்கு எப்படித் தெரியும்? பழுவேட்டரையர்களுக்கு எப்படித் தெரியும்?"

"நல்ல கேள்வி கேட்டாய், அம்மா! எங்களுக்கு மட்டுந்தானா தெரியும்? உலகத்துக்கெல்லாம் தெரியும். நீ அனுப்பிய தூதன் இலங்கையில் முதலில் நம் வீரர்களால் சிறைப்படுத்தப்பட்டான். அதனால் இலங்கையில் உள்ளவர்களுக்கெல்லாம் தெரியும். அவனோடு கோடிக்கரை வரை சென்ற வைத்தியர் மகன் மூலமாக இந்த நாட்டில் உள்ளவர்களுக்கெல்லாம் தெரியும்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஒரு வியாபாரியின் கதை



அவன் ஒரு வியாபாரி. எதிர்காலத்தில் பெரிய தொழிலதிபராக வரவேண்டும் என்று ஆசைப் பட்டான். ஆனால், சரியாகத் திட்டமிட்டுச் செயற்படாததால் அவன் பெரிய நஷ்டத்தைச் சந்திக்க நேர்ந்தது.

மிகுந்த கவலையில் ஆழ்ந்த அவன் வீட்டுக்குச் செல்ல மனமில்லாமல், ஊரை விட்டு ஒதுக்குப்புறமாக இருந்த ஆற்றங்கரைக்குப் போனான். அங்கே மெல்லிய நிலா வெளிச்சத்தில் ஆற்று மணலில் அமர்ந்து நினைவுகளை ஓட விட்டான். வியாபாரத்தில் தோற்றுப் போன அவலம் அவனை அழுத்தியது.

பங்குதாரர்கள் எப்படியெல்லாம் தனக்குத் துரோகம் செய்தார்கள், நம்பவைத்துக் கழுத்தறுத்தார்கள் என்று எண்ணியெண்ணி வேதனையில் மூழ்கினான்.

தொடர்ந்து எப்படி வியாபாரம் செய்யப் போகிறோம். குடும்பத்தை எப்படி நடத்தப் போகிறோம் போன்ற எதிர்காலக் கவலைகள் வேறு ஒரு புறம் எழுந்து அடங்கின.

இந்தச் சிந்தனையினாலேயே அவன் வலக்கை அவனை அறியாமல் ஆற்று மணலைத் துழாவிகைக்குத் தட்டுப் பட்ட சிறு சிறு கற்களை எடுத்து ஆற்றில் வீசியவண்ணம் இருந்தது.

இப்படியாக அவன் அன்றிரவு முழுதும் அங்கேயே அமர்ந்திருந்தான். பொழுது விடிய ஆரம்பித்தது! வெளிச்சம் பரவியது. ஆற்றிலே வீசுவதற்கு அவனைச் சுற்றி இருந்த கற்கள் எல்லாம் தீர்ந்து போயிருந்தன.

அவன் தன் கையில் இருந்த கடைசிக் கல்லைப் பார்த்தான். பிரமித்துவிட்டான். காரணம் அது சாதாரண கூழாங்கல் இல்லை. விலை உயர்ந்த வைரக் கல்.

யாரோ கொள்ளையர்கள் தாங்கள் கொள்ளையடித்து வந்த வைரக்கற்களை ஆற்றங்கரையிலேயே தவறவிட்டு விட்டு ஓடியிருக்கிறார்கள்.

அவற்றைத்தான் அவன் இருட்டில் இன்னதென்று அறியாமல் எடுத்து வீசியிருக்கிறான்.

ஒருவகையில் பார்த்தால் நம்மில் பலர் அந்த வியாபாரி மாதிரிதான். கடந்த காலம் மற்றும் எதிர்கால நினைவுகளில் மிதந்து கொண்டு நிகழ்காலம் என்கிற வைரக் கற்களை வீணடித்துக் கொண்டிருக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கபூர்வமான மனோநிலையை உருவாக்கி, வீணான மற்றும் தீய எண்ணங்கள் எனும் எதிரியை அழிப்போம்!
~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆற்றாமையில் உழன்ற போதும் வாக்களிப்பை வெறுக்காதீர்கள்

**ஆற்றாமை** என்ற சொற்பதம் நம் தமிழ் மொழியில் மிகவும் முக்கியமானது.

அதிலும் நம் பழந்தமிழில் ஆற்றாமை என்ற சொற்பதங்கள் முதன்மை பெற்றிருப்பதைக் காண முடியும்.

எம் ஐயன் வள்ளுவன் ... **ஆற்றாது அழுத கண்ணீர்...** என்று தன் குறள் வழி மூலம் செப்பி நிற்பதைக் காணலாம்.

இதேபோன்று திருவாசகம் தந்த மணிவாசகர் **ஆற்றேன்** என்கிறார்.

ஆக, ஆற்றாமை என்பதன் வெளிப்பாடு இனித் தாங்க முடியாது எனும் மிகக் கொடுமையான துன்பத்தைக் குறித்து நிற்பதாகும்.

ஆம், இலங்கைத் திருநாட்டில் நம் தமிழ் மக்கள் பட்ட துன்பம் சொல்லிமாளா.

உண்மை. இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்குச் செய்த கொடுமை கொஞ்சமல்ல.

இதற்கும் மேலாக, இழப்புக்களைச் சந்தித்த மக்களுக்கு நீதி கிடைப்பதைக்கூட சிங்களப் பேரினவாதம் அனுமதிப்பதாக இல்லை.

இந்த நிலையில் உலக நாடுகளும் ஐ.நா சபை உள்ளிட்ட சர்வதேச பொது அமைப்புகளும் ஈழத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அவலம் தொடர்பில் கிஞ்சித்தும் கவனமெடுக்கவில்லை.

வெறுமனே அறிக்கைகளை மட்டும் வெளியிடுவதன் மூலம் நிலைமையைச் சுமுகப்படுத்த சர்வதேச அமைப்புகள் முற்படுவது பொருத்தமற்றதாகும்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது, வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்தது தமிழினப் படுகொலையாக இருந்த போதிலும் அது தொடர்பில் சர்வதேச சமூகத்தைக் கையாள்வதில் எம்மிடம் எந்தவித திட்டங்களும் இருக்கவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

தவிர, போருக்குப் பின்பு தமிழ் அரசியல் தரப்புகள் மௌனத்தையே கடைப்பிடித்தன.

அவ்வாறு மௌனத்தைக் கடைப்பிடிப்பதற்கு அரச பயங்கரவாதமும் காரணமாக இருந்திருக்கலாம்.

இருந்தும் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் அரசியல் தலைமையானது; எமக்கு ஏற்பட்ட இழப்பை எமக்கான பலமாக மாற்ற முடியாமல் இருந்ததன் காரணமாக, சர்வதேச அழுத்தங்களை இலங்கை அரசு மீது பிரயோகிக்க முடியாமல் போயிற்று.

ஆக, தமிழ் அரசியல் என்பது தோற்றுப்போன அரசியலாகவே பிரகடனம் செய்யப்பட வேண்டும்.

இருந்தும் தேர்தல் என்று வருகின்றபோது நமக்கும் ஜனநாயகக் கடமை உண்டு என்பதால் மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவது கட்டாயமானது.

இதை நாம் கூறுவதற்கு மூலகாரணம் ஆற்றாமை காரணமாக வாக்களிக்காமல் விடுகின்ற மனநிலை நம் மக்களிடம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதுதான்.

# அரச சேவையில் அரசியல் தலையீடுகள் இருக்காது

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

அரச சேவையில் அரசியல் அதிகாரத்தின் தலையீடு இல்லை எனவும் அரச அதிகாரிகள் சுதந்திரமாகச் செயற்பட வாய்ப்புள்ளதாகவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை அரச சேவையாளர் சங்கத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் நோக்கத்திற்கும் அரச சேவைகள் செயற்படும் விதத்திற்கும் இடையில் இடைவெளி காணப்படுவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தை அடைவதற்கு இதுவரையில் அரச நிர்வாகம் செயற்பட்டு வந்த விதம் மாற்றமடைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகளை நிறுத்துவதே அரசாங்கத்தின் தலையாய கடமை.

ஊழல் மற்றும் மோசடி காரணமாக அரசாங்கத்தின் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

# காலி முகத்திடல் மைதானத்தை சமூக செயற்பாடுகளுக்கு வழங்க

## அமைச்சரவை அங்கீகாரம்

காலிமுகத்திடல் மைதானத்தை பல்வேறு சமூக செயற்பாடுகளுக்காக மீள வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

காலிமுகத் திடல் மைதானத்தை சமூக செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்காதிருக்க கடந்த வருடம் ஏப்ரல் 17 ஆம் திகதியன்று அப்போதைய அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

காலிமுகத் திடல் மைதானத்தின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக மாதாந்தம் சுமார் 2.5 - 3 மில்லியன் ரூபா வரை செலவாகுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தொகையை ஈடு செய்வதற்காக புதிய தீர்மானத்தை எதிர்பார்ப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-7)

## லொறி மோதியதில் பெண் உயிரிழப்பு

(மொனராகலை)

வெல்லவாய - மொனராகலை பிரதான வீதியில் ஆனபல்லம பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

லொறி ஒன்று வீதியில் பயணித்த பெண் ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மொனராகலை, ஆனபல்லம பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## பூச்சிக் கொல்லிகளுடன் இரு சந்தேக நபர்கள் கைது

திவுலப்பிட்டிய, பல்லபான பிரதேசத்தில் சட்ட விரோதமாகக் கொண்டு வரப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக திவுலப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

திவுலப்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து அனுமதியின்றி சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட 700 பூச்சிக் கொல்லி மருந்துப் பொதிகள் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் பலாங்கொடை மற்றும் பல்லேபெத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார். (ம-7)

## போட்டிகள் பிற்போடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொது சன நூலகத்தினால் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கலாநிதி ஏ.பி.ஜே அப்துல்கலாம் நினைவாக நடாத்தப்படவிருந்த போட்டிகள் யாவும் குறித்த தினத்தில் சைவ பரிபாலன சபை பரீட்சைகள் இடம்பெறும் காரணத்தினால் பிற்போடப் பட்டுள்ளன.

இப் போட்டிகள் யாவும் 17.11.2024 ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும் என யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தின் பிரதம நூலகர் அறிவித்துள்ளார். (ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை 01 - 30, 2024**

**"ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்"**

# புதையல் தோண்டிய 13 பேர் கைது

தொம்பே பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடமாபிட்டிகம பிரதேசத்தில் உள்ள தேவாலயம் ஒன்றில் புதையல் தோண்டியதாகக் கூறப்படும் 13 சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (05) கைது செய்யப்பட்டுள்ளதாக தொம்பே பொலிஸார் தெரிவித்தனர்.

தொம்பே பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஹெய்யன்துடுவ, சியம்பலாப்பே, தெல்கொட, மல்வானை, இம்புல்கொட, தொம்பே, கேகாலை, ஹோமாகம, கடுவலை, கிரிந்திவெல மற்றும் ஹங்வெல்ல ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 22 முதல் 58 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள், கார், வேன் மற்றும் 02 முச்சக்கரவண்டிகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-7)

# ஜனாதிபதி தொடர்பில் போலித் தகவல்

## சந்தேக நபர் கைது

ஜனாதிபதியின் உடல் நிலை தொடர்பில் போலியான தகவல்களைப் பரப்பியமை குறித்து விசாரணைகளை மேற்கொண்டு சந்தேக நபர்களைக் கைது செய்து மன்றில் முன்னிலைப் படுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

சட்டத்தரணி சுனில் வதகல செய்த முறைப்பாட்டின் பிரகாரம், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்று (06) கொழும்பு நீதவான் நீதிமன்றில் சமர்ப்பணங்களை முன்வைத்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தின்போது தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் உடல்நிலை குறித்த போலியான தகவல் சுபாஷ் என்ற நபரினது கணக்கின் ஊடாக இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணை அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்த குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேக நபர்களைக் கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் வரலாறு பற்றிய ஒரு பார்வை – பகுதி II

16

**கலாநிதி க. தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

மேலும் தேசிய தேர்தல் ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக் குழுக்கள் இந்த திருத்தச் சட்டத்தின் மூலம் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை இரட்டைப் பிரஜா வுரிமையுள்ளோர் பாராளுமன்ற உறுப்பினராகுவதற்கான சந்தர்ப் பம், இந்த திருத்தத்தின் மூலம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

தற்போது 22ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், இலங்கை மற்றும் அமெரிக்க பிரஜாவுரிமைகளைக் கொண்டுள்ள பசில் ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினராக வருவதற்கான சந் தர்ப்பம் இல்லாமல் போயுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ அரசாங் கத்தில் அவரின் சகோதரரான பசில் ராஜபக்ஷ நிதியமைச்சராக இருந் தார். அந்தக் காலப்பகுதியில் மக்கள் போராட்டம் ஏற்படுத்திய அழுத் தங்களை அடுத்து, அவர் தனது அமைச்சுப் பதவி மற்றும் பாரா ளுமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

ஆயினும் "பசில் ராஜபக்ஷ மீண்டும் பாராளுமன்றம் வரு வார்" என்கிற பேச்சு, அரசியல ரங்கில் பரவலாக இருந்துவந்த நிலையிலேயே, இரட்டைப் பிரஜா வுரிமையுடையோர் பாராளுமன்ற உறுப்பினராக முடியாதவாறு 22 ஆவது திருத்தம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

19ஆவது திருத்தத்தில் இரட் டைப் பிரஜாவுரிமைகளைக் கொண் டோர், பாராளுமன்ற உறுப்பினரா குவதற்கு தடை விதிக்கப்பட்டி ருந்தது. அதனை கோட்டாபய ராஜபக்ஷ 20ஆவது திருத்தத்தின் மூலம் இல்லாமல் செய்தார். அதன் காரணமாகவே, இரட்டைப் பிரஜா வுரிமையினைக் கொண்ட பசில் ராஜபக்ஷ, தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினரானார்.

இதேவேளை, 22ஆவது திருத் தின் மூலம், பாராளுமன்றத்தை இரண்டரை வருடங்களில் கலைக் கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

19ஆவது திருத்தத்தில் 4 1/2 வருடங்களுக்குப் பின்னரே பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிக்கு வழங்கப்பட் டிருந்தது. ஆனாலும், கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் கொண்டு வரப்பட்ட 20ஆவது திருத்தத்தின் மூலம், 2 1/2 வருடங்களின் பின்னர் பாராளுமன்றத்தைக் கலைப் பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடைத்தது. அது அவ்வாறே 22 ஆவது திருத்தத்திலும் சேர்க்கப்பட் டுள்ளது.

சட்டத்தினை உருவாக்கும் ஸ்தா பனமாக பாராளுமன்றமானது காணப் பட்டாலும் அது இலங்கையில் சில குறைபாடுகளைக் கொண்டு பலவீன மாகக் காணப்படுகின்றது. அதாவது பாராளுமன்றத்தினை கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல், பாரா ளுமன்றத்தின் அதிகாரம் என்ப வற்றில் ஜனாதிபதி ஆதிக்கம் செலுத் துவதுடன் பாராளுமன்ற தீர்மா னங்களையும் மக்கள் தீர்ப்பு மூலம் ஜனாதிபதியினால் மாற்றமுடியுமான தாக உள்ளது.

1978 ஆம் ஆண்டு அரசியல மைப்பில் விகிதாசாரதேர்தல் முறை இலங்கையில் உருவாக்கப்பட்டது. இது பல்வேறு குறைபாடுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. அதாவது தேர்தல் மற்றும் வாக்க ளிப்பு என்பது மக்கள் இறைமையை பிரதிபலிக்கும் ஒன்றாகும். இலங் கையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியல் முறையே காணப்படுகின்ற போதிலும் இவ் விகிதாசாரப் பிரதி நிதித்துவத்தில் வாக்களிப்பு தொடர் பாக மக்களுக்கு விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது.

மேலும் தனியான கட்சிகள் பெரும் பாண்மை பெறமுடியாமை, இடைத் தேர்தல்கள் நடத்தப்படுவதற்கான வாய்ப்பின்மை மக்களுக்கும் வேட் பாளர்களுக்குமிடையே உள்ள தொடர் பினைக் குறைக்கின்றது.

## விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை

விகிதாசார பிரதிநிதித்துவ முறை யொன்றின் கீழ் (Proportional Representative System) ஒரு கட்சி அல்லது குழுசார்பாக வாக்காள ரினால் தமது வாக்குகள் பயன்படுத் தப்படும். இதற்கு மேலதிகமாக வாக்களிக்கப்பட்ட அக் கட்சியின் அல்லது குழுவின் வேட்பாளர்கள் பலர் சார்பாக விருப்புகளை அடை யாளமிடுவதற்கும் வாக்காளருக்கு இடமளிக்கப்படுகின்றது.

உரிய கட்சி அல்லது குழுவினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையின் சதவீதத்திற்கமைய அவற்றிற்கான ஆசன உரித்துரிமை கிடைக்கப் பெறுவதோடு, வேட்பாளர்கள் பெற் றுக் கொள்கின்ற விருப்புகளின் எண்ணிக்கை ஒழுங்கு வரிசைக் கமைய உரிய உறுப்புரிமைக்கான வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

தற்போது இலங்கையில் அமுல் செய்யப்படுகின்ற பாராளுமன்றத் தேர்தல்களில் இதற்கமையவே பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படு கின்றனர். இப் பிரதிநிதிகள் தேர்ந் தெடுக்கப்படுகின்ற முறைமையின் அடிப்படைத்தத்துவம் யாதெனில், ஒரு தரப்பினரால் உரித்தாக்கிக் கொள்ளப்படுகின்ற உறுப்புரிமைக ளின் எண்ணிக்கைக்கும் பெற்றுக் கொள்ளப்படுகின்ற வாக்குகளுக்கு மிடையே குறிப்பான ஒரு விகிதா சாரமுறை பேணப்படுகின்றதென்ப தாகும்.

விகிதாசார பிரதிநிதித்துவ முறை யொன்றின் கீழ் மாவட்டங்களுக் கான உறுப்பினர்கள் எண்ணிக்கை யைத் தீர்மானித்தல் 1978ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் 95 ஆம் உறுப் புரைக்கமைய 1978 நவம்பர் மாதம் நியமனம் செய்யப்பட்ட தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய ஆணைக் குழுவிற்கு அவ்வரசியலமைப்புக்க மைய ஒருமுறை மாத்திரம் மேற் கொள்ளப்படுகின்ற தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய பணிகளில் ஈடுபட வேண்டியிருந்தது.

முந்திய சந்தர்ப்பங்களோடு ஒப்பிடுகையில் இலங்கையின் விகி தாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை செயற்படுவதற்கு அடிப்படை யான தேர்தல் மாவட்டங்களை பிரித்தொதுக்குவதற்கு கட்டளை யிடப்பட்ட முதல் சந்தர்ப்பமாக இச் சந்தர்ப்பம் விளங்கியமை ஒரு விசேடமான விடயமாகக் காட்டப்படமுடியும்.

மாகாண எல்லைகளைக் கருத் திலெடுத்து மாகாணங்களில் அமையப்பெற்றுள்ள நிர்வாக மாவட்டங்களின் எல்லைகள் மாற்றமடையாதவாறு முழுநாடும் 20இற்குக்குறையாததும் 24ஐ விஞ்சாததுமான தேர்தல் மாவட் டங்களாகப் பிரித்தொதுக்கப்பட்டு, அவற்றை அடையாளம் காண்ப தற்கான இலக்கமொன்றையும் பெயர் ஒன்றையும் வழங்கு வதற்கான சட்ட ஏற்பாடுகளும் காணப்பட்டன.

அரசியலமைப்பின்படி பாராளு மன்றம் 225 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் எனவும், இவர்க ளுள் 196 உறுப்பினர்கள் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து மக்களால் தெரிவு செய்யப்படுவர் எனவும், இவர்களுள் 36 உறுப் பினர்க்கள் ஒரு மாகாணத்துக்கு நான்கு பேர் என்ற அடிப்படையில் 9 மாகாணங்களுக்கும் பிரித்த ளிக்கப்படுவர் எனவும் கூறப்பட் டுள்ளது.

ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள சகல தேர்தல் மாவட்டங்களுக்கும் குறைந்தது ஒரு உறுப்பினரை யாவது பெற்றுக் கொள்ளும் வகை யில் இது பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இதனைஅடிப்படையாகக்கொண்டு 36 உறுப்பினர்களில் ஒவ்வொரு மாவட்டத்திற்குமான உறுப்பினர் கள் அட்டவணை -1 இல் காட் டியவாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை-1 . 36 உறுப்பினர்களில் ஒவ்வொரு மாவட்டத்திற்குமான உறுப்பினர்கள்

| தேர்தல் மாவட்டம் | A | தேர்தல் மாவட்டம் | A | தேர்தல் மாவட்டம் | A |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 2 | அம்பாந்தோட்டை | 2 | அநுராதபுரம் | 2 |
| கம்பஹா | 1 | யாழ்ப்பாணம் | 1 | பொலன்னறுவை | 2 |
| களுத்துறை | 1 | வன்னி | 3 | பதுளை | 2 |
| கண்டி | 1 | மட்டக்களப்பு | 1 | மொனறாகலை | 2 |
| மாத்தளை | 1 | திகாமதுல்லை | 2 | இரத்தினபுரி | 2 |
| நுவரெலியா | 2 | திருகோணமலை | 1 | கேகாலை | 2 |
| காலி | 1 | குருநாகல் | 2 | மொத்தம் | 36 |
| மாத்தறை | 1 | புத்தளம் | 2 | A -உறுப்பினர்களின் எண்ணிக்கை | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதம், மதவாதத்தினால் தேர்தலை சிதைக்க முடியாது

## மக்கள் சந்திப்பில் பிரதமர் ஹரிணி



(கொழும்பு)

இனவாதம் மற்றும் மதவாதத்தின் ஊடாக தேர்தலை சிதைப்பதற்கு வாய்ப்பில்லை என்பது நிரூபணமாகியுள்ளதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கம்பளையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அத்தோடு, அரசியல்மேடைகளில் பொய் சொல்பவர்கள் மக்களால் நிராகரிக்கப்படுவார்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வெற்றி பெற்றபோது நாட்டில் புரட்சி ஒன்று ஏற்பட்டதாகவும், தாங்கள் மக்களுக்கு நெருக்கமாகவும் மக்களுக்காகவும் ஒரு புரட்சியை நடத்தி வருவதாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, நவம்பர் 14 ஆம் திகதி பாராளுமன்றத்தை சுத்தப்படுத்தி பாராளுமன்றத்தை மக்கள் பக்கம் திருப்புவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், மக்களின் தேவைக்கேற்ப சட்டங்களை இயற்றும் ஜனாதிபதி ஒருவர் இருப்பதற்கும், பாராளுமன்றத்தை பணம் ஏற்றுக்கொள்ளும் இடமாக மாற்றுவதற்கும் யார் இருக்க வேண்டும் என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

### கடவுச்சீட்டு கொள்வனவு விவகாரம்

# முன்னாள் ஜனாதிபதி ரணில் பிரதிவாதியாக இணைப்பு

(கொழும்பு)

இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து கடவுச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்தமையை சவாலுக்கு உட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதிவாதியாக இணைக்கப்பட்டுள்ளார்.

750,000 சாதாரண கடவுச்சீட்டுகள் மற்றும் 5 மில்லியன் இலத்திரனியல் கடவுச்சீட்டுகளை இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களிடம் கொள்வனவு செய்வதற்குக் கடந்த அரசாங்கத்தில் அமைச்சரவை எடுத்த தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறு கோரி இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ம-7)

## குளவிக்கொட்டு...

மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த நவரத்தினம் கேதீஸ்வரன் (வயது-35) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் நேற்று முன்தினம் இரவு தனது வாகனத்தில் நித்திரையில் இருந்தபோது குளவி கொட்டியுள்ளது. வலி தாங்கமுடியாமல் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி இளைஞர் பரிதாபமாக நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

சடலம் உடல்கூற்று சோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சமஷ்டி...

நேற்றுக் கொழும்பில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் சமஸ்டி அரசியலமைப்பு ஒன்று அரசாங்கத்தினால் உருவாக்கப்படமாட்டாது என்றார்.

மேலும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தைத் திருத்துவதற்கு அவசியமில்லை.

சகல மதங்களிலும் உள்ள சட்டங்கள் தொடர்பில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் அந்தந்த மதத் தலைவர்கள் மற்றும் நிபுணர்களுடன் கலந்துரையாடிய பின்னரே திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் தற்போது நடைமுறையில் உள்ள இஸ்லாமிய மதத்துடன் தொடர்புடைய சட்டங்களை மாற்றுவதற்கு எந்தவொரு தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது 88 நிறுவனங்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட 3,500க்கும் அதிகமான ஹஜ் யாத்திரிகர்கள் புனித மக்கா செல்கின்றனர்.

குறித்த 3,500 பேரும் கோட்டா முறைமையின் ஊடாக செல்கின்றனர்.

இந்தநிலையில், மேல் மாகாணத்தைத்தவிர்ந்த ஏனைய மாகாணங்களில்உள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் ஹஜ் யாத்திரையைக்காக புனித மக்கா செல்லக் கூடியவர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்குமாறு 88 நிறுவனங்களுக்கு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளதாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2024.11.06 — சீட்டிழுப்பு இலக்கம் 5648 — L 9 6 2 4 1 5
அத சம்பத — L 2 4 1 5 — சீட்டிழுப்பு இலக்கம் 223 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2024.11.06 — சீட்டிழுப்பு இலக்கம் - 1678 — J 18 35 39 65 J — Double Chance 82249

மெகா பவர் — திகதி 06/11/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1996 — X 06 22 55 56 69 — Double Chance 186412

லக்கி 7 VIP — திகதி 2024.11.06 — சீட்டிழுப்பு இலக்கம் 0474 — U 4 7 0 7 5 4 U

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3890 — சீட்டிழுப்பு திகதி 06.11.2024 — E 02 33 41 51 — E 113971

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.11.06 — சீட்டிழுப்பு இலக்கம் 957 — விருச்சிகம் 49 53 55 58 விருச்சிகம் — 024205 — 07

உத்தியோகபூர்வ முடிவுகள் — 06.11.2024 — வெற்றி வாரம் 356 — L 8 6 2 8 4 4 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,113,216.00 — 14850 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2622 — சீட்டிழுப்பு திகதி 2024.11.06 — தினம் புதன்கிழமை — 18 35 36 74 I — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,185,037.60 — DLB

சனிதா — திகதி 06.11.2024 — வெற்றி வாரம் 4783 — 24 57 69 74 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,460,401.60 — 35760 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4334 — சீட்டிழுப்பு திகதி 06.11.2024 — தினம் புதன்கிழமை — 09 10 51 53 மேடம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,825,071.20 — 219240 — DLB

I 06 26 33 38 65 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.554,655,446.80 — 1798 — 06.11.2024 — புதன்கிழமை — DLB

ஜயோதா Jayoda — திகதி 2024.11.06 — வெற்றி வாரம் 2075 — 11 44 51 67 O — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 26,189,990.00 — DLB

அட கோடிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம் : 2448 — சீட்டிழுப்பு திகதி : 2024.11.06 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,300,495.20 — 02 05 59 61 Q — 717731 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**ஊர் கோழிக் குஞ்சுகள்**

1 நாள் குஞ்சுகள் - 130/=
விறாத்து குஞ்சுகள் - 1000/=
ஊர் கோழி 1Kg - 1000/=
தினமும் பெற்றுக் கொள்ளலாம்
**சுழிபுரம்**
(523)
**077 332 2433**



**யோக்கட் கொள்வனவுகள்**

பாடசாலைகளுக்கு அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். அதிபர்/ ஆசிரியர் எம்மை தொடர்பு கொள்ளலாம்.
50/=
~~80/=~~
(524)
Happy Supermarket
உரும்பிராய்
077 121 5546 / 077 780 8030


## சுகாதார அமைச்சின் கீழ் பிரதமரின் வைத்திய பிரிவு

(கொழும்பு)

பிரதமர் அலுவலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த வைத்திய பிரிவினை கலைத்து அதில் சேவை செய்த வைத்திய அதிகாரிகள் மற்றும் சேவையாளர்கள் உட்பட அங்கிருந்த சுகாதார உபகரணங்கள், ஔடதங்கள், இரண்டு அம்பியூலன்ஸ் வண்டிகள் என்பவற்றை மீண்டும் சுகாதார அமைச்சிற்கு பெற்றுக்கொடுக்கும் நிகழ்வு பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்திரி தலைமையில் நேற்று முன்தினம் பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

அத்தியாவசியமற்ற செலவுகளை குறைப்பதற்கு அரசு எடுத்துள்ள கொள்கை ரீதியிலான தீர்மானத்திற்கமைய இந்த பிரிவிடம் காணப்பட்ட மனிதவளம் மற்றும் பௌதீக வளங்கள் சுகாதார அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் அவை பொதுமக்களின் சுகாதார தேவைகளுக்கென பயன்படுத்தப்படவுள்ளன. (ம-7)


**A/L வரலாறு**

மாபெரும் கருத்தரங்கு
வடக்கின் முதல் நிலை வரலாறு பாட ஆசிரியர்
M.பத்மன் B.A(Hons) History, P.G.D.E, Dip. in Psy,
M.A (Hons) History
Master of Education (M.E.D)
க.பொ.த உயர்தர வரலாறு பாட வளவாளரின்
வழிகாட்டலை பெற்று உயர் பெறுபேறுகளைப் பெற்றிட வாரீர்.
இடம்: D.M.I ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
காலம்: 09.11.2024 சனிக்கிழமை, 10.11.2024 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8.00 மணி
(C-1539)
தொடர்புகளுக்கு: 077 482 5587












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.